Approved by the Text-Book Committee, Madras.

GEOGRAPHY
LOCAL HISTORY & CIVICS
OF THE
RAMNAD DISTRICT.

இராமநாதபுரம் ஜில்லா

பூகோள சாஸ்திரம்.

ஜில்லா சரித்திரமும், சிவிக்ஸும் சேர்ந்தது.

BY

N. R. SUBRAMANIA SARMA,
Tamil Pandit, High School, Pasumalai.

E. M. GOPALAKRISHNA KONE,
MADURA.

1927. [Price 5 Annas.

...sior Press, Madura.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
24 JAN 1928
MADRAS

U. 21196
N27.
68838

சிவிக்ஸ், துரைத்தன விளக்கம் என்னு

இராஜாங்கமுறை நூல்.

நேச்சர்ஸ்டடி அல்லது இயற்கைப் பொருட்பாடம்.

E. கோவிந்தஸாமி ராவ் அவர்கள் எழுதியவை.

துரைத்தனத்தாரால் அங்கீகரிக்கப்பெற்றவை.

மாணவர்கட்கும் உபாத்தியாயர்கட்கும் மிகவும் அவசியமானவை.

எலிமெண்டரி பாடசாலைகளின் பாடமாக ஏற்பட்டுள்ள (சிவிக்ஸ்) துரைததன விளக்கம் என்னும் இராஜாங்க முறைநூல், இயற்கைப் பொருட்பாட சம்பந்தமான புத்தகங்கள் அநேகம் ஏற்பட்டிருப்பினும்; அவையாவும் நுண்ணறிவுடையோரன்றி ஏனையோர் அதன் விஷயங்களை நன்குணர்தலரிதாயிருப்பது றியும், உபாத்தியாயர்கள் மாணவர்கட்குப் போதிக்கும் ரிதாயிருப்பது பற்றியும் உபாத்தியாயர்கட்குச் சிரம மாணவர்கள் இப்புத்தகத்தைப் படித்த மாத்திரத்தில் இலகுவா விஷயங்கள் தெரியும் வண்ணம் பரீக்ஷாதிகாரிகளின் வினாக்களை யனுசரித்தே இனிய எளிய தமிழ்நடையில் எழுதி, வெளிப்படுத்தி ருக்கின்றோம். இதனைக் கண்ணுற்ற நண்பர்கள் கைவிடமாட் டார்கள் என்று நம்புகிறோம் தனித்தனி விலை அணா 4

தமிழ் அச்சுக்காப்பிப் புஸ்தகங்கள்.

A நாராயணசாமி ஆச்சாரியார் செய்தது.

1 நம்பர். காப்பி, 2 நம்பர். காப்பி, 3 நம்பர். காப்பி, ஷி A காப்பி 4 நம்பர் காப்பி 5 நம்பர் காப்பி. தனித்தனி விலை அணா 1

செய்யுட் பாடப் புத்தகங்கள்.

உலகநீதி மூலமும் உரையும்	பை 9
ஆத்திசூடி மூலமும் உரையும்...	பை 9
கொன்றை வேந்தன் மூலமும் உரையும் ...	பை 9
வெற்றிவேற்கை மூலமும் உரையும் ...	பை 9
மூதுரை அல்லது வாக்குண்டாம் உரையுடன்...	அணா 1
நன்னெறி மூலமும் உரையும்	அணா 1½

இவை மூலச்செய்யுள்கட் கேற்ற பதவுரையும், கருத்துரையும் இலக்கணக் குறிப்பும் பாடசாலைச் சிறுவர்கட்கு ஏற்றவாறு இலகுவான நடையில் எழுதப்பெற்றுள்ளன.

நான்காம் வகுப்புப்

பூகோள சாஸ்திரம்.

இராமநாதபுரம் ஜில்லா.

புதிய முறைப்படி எழுதப் பெற்றது.

பசுமலை உயர்தர கலாசாலை ஆசிரியர்
நெ. ரா. சுப்பிரமணிய சர்மா
எழுதியது.

துரைத்தனத்தார் அங்கீகரித்தது.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
24 JAN 1928
MADRAS

1659
3604
915.48

ACL-TNAL
03054

இ. மா. கோபாலகிருஷ்ணக் கோன்,
புஸ்தக வியாபாரம்,
மதுரை.

பதின்மூன்றம் பதிப்பு.

காபி ரைட்] 1927. [விலை அணா 5.

Printed at
The Excelsior Press,
Madura.

68838

U.21196
N29



நமது இந்திய சக்கரவர்த்தியாகிய

ஐந்தாம் ஜார்ஜ் மன்னர்

வாழ்த்துப் பாட்டு.

'வீடலால' என்ற தேவார மெட்டு.

சக்ரவர்த்தி ஆகும் ஐந்தாம் ஜார்ஜ் மன்னன் வாழ்கவே.
மிக்ககீர்த்தி பெற்ற ராணி மேரி என்றும் வாழ்கவே. (1)

மக்கள் சுற்றம் ஆதியோர்கள் மன்னிமேலும் வாழ்கவே
திக்கனைத்தும் போற்றும் இந்தியதேசமென்றும்வாழ்கவே.

கப்பமீயும் அரசர் தாமும் கனமிகுந்து வாழ்கவே.
ஒப்பிலாத ஆங்கிலேயர் ஓங்கி ஓங்கி வாழ்கவே. (3)

கல்வியோங்க நிதியம் தந்த கருணைவள்ளல் வாழ்கவே.
செல்வராய ஏழாம்எட்வர்ட் செல்வன் என்றும் வாழ்கவே.

அருக்கன் அஸ்த மனமில்லாத அவனிநாதன் வாழ்கவே.
உருக்கமாக நம்மை யாளும் உளத்தன் ஜார்ஜ் வாழ்கவே.

முகவுரை.

இராமநாதபுரம் ஜில்லா ஏற்பட்ட பிறகு அந்த ஜில்லாவைப் பற்றிப் புதிய சட்டத்திற்கு ஏற்பட்டபடி முதலில் யாமே எழுதினேம்.

இதில், ஸ்கேலின்படி படம் எழுதும் விதத்தை நன்ருய் விளக்கி இருக்கிறேம். அதை விளக்குகையில், உபாத்தியாயர் பிள்ளைகளுக்கு ஸ்கேல் முதலியவற்றைக் கொடுத்து, இப்புத்தகத்திற் காட்டியபடியே பிளான் எழுதும் முறையைக் கற்பிக்கவேண்டும். தெரிந்த விஷயத்தைக்கொண்டு தெரியாத விஷயங்களைக் கற்பித்தலே முறையாதலால், பள்ளிக்கூடம் இருக்கும் கிராமத்தைப் பற்றிக் கற்பித்தபின்னரே உபாத்தியாயர் ஜில்லாவைப் பற்றிக் கற்பிக்கவேண்டும். பூகோள சம்பந்தமான பதங்களை விளக்குகையில் உபாத்தியாயர் பிள்ளைகளுடன் வெளிப் பக்கங்களில் போய், அங்குள்ள விஷயங்களைக் கவனிக்கச் செய்யவேண்டும். நிற்க.

இந்த ஜில்லாவின் இயற்கை அமைப்பின்படி சில வகைகளைப் பிரித்து, அவை ஒவ்வொன்றிலும் உண்டாகும் பொருள்களை நன்ருய்க் காட்டியிருக்கிறேம்.

ஸ்கேல் ,விபரம், பூமி, படம் இவற்றின் திசைகள், பூமியின் உருவம், பூகோள சம்பந்தமான பதவிளக்கம், ஜில்லாவின் இயற்கை அமைப்பு, ராஜாங்கப் பிரிவினை இவற்றை விளக்குவதற்குப் படங்களைச்சேர்த்தும், ஜில்லாவின் சரித்திரம், துரைத்தனவிளக்கம், சில இடங்கள் சம்பந்தமான கதைகள், ஆகிய இவற்றைக் கூட்டியும் முன் பதிப்புகளை வெளியிட்டோம். இப்பதிப்பில் பொது விவரத்தை நன்கு விளக்கி எழுதி யிருப்பதோடு அதற்கு அவசியமான புதுப் படங்களையும் சேர்த்திருக்கிறேம்.

பசுமலை,
15—2—27.

நே. ரா. சு.

பொருள் அடக்கம்.

விஷயம்.		பக்கம்.
போது விபரம்.		
நான்கு திசைகள்	....	1
பூமியின் திசைகளை அறிதல்	....	2
படத்தில் திசைகளை அறிதல்	....	3
எட்டுத்திசை, நக்ஷத்திரங்களும், திசைகளும்		4
திசையறி கருவி	....	6
கைக்காம்பஸ், சித்திரம், நிலப்படம்	...	7
ஸ்கேல் விபரம்	....	9
பள்ளிக்கூட நிலப்படம்	...	12
கிராம நிலப்படம்	...	14
பூமியின் உருவம்	...	15
பூமி, சூரியன், சந்திரன்	...	16
கிராமமும், சுற்றுப்புறமும்	. .	20
கைத்தொழில்கள்	...	23
வர்த்தகம் (வியாபாரம்)	....	29
போக்குவரவுச் சாதனங்கள்	...	30
ஜனங்கள், ஜாதி, மதம், பாஷை முதலியன		32
துரைத்தனம்	...	34
நிலப்பிரிவுகள்	...	35
நீர்ப்பிரிவுகள்	....	38
ஜில்லா	...	40

இராமநாதபுரம் ஜில்லா.

எல்லைகள் 41
பிரிவுகள், இயற்கை அமைப்பு 43
மலைகள் 44
நதிகள் ... 45
ஏரிகள் ... 47
சீதோஷ்ண ஸ்திதி, விளைபொருள்கள். ... 48
தாவரங்கள் 49
கைத்தொழிலும், ஜீவனமுயற்சியும், வியாபாரமும் 50
போக்குவரவு.
இருப்புப்பாதை 52
வண்டிப்பாதை ... 54
பாம்பன் கால்வாய் ... 55
ஜனங்கள் 56

தாலூகாக்களும், முக்கிய பட்டணங்களும்.

I. சிவகங்கை ஜமீன்.
1. சிவகங்கைத் தாலூகா ... 57
2. திருப்பத்தூர் தாலூகா ... 59
II. இராமநாதபுரம் ஜமீன்.
3. இராமநாதபுரம் தாலூகா 60
4. பரமக்குடி தாலூகா ... 65
5. முதுகுளத்தூர் தாலூகா ... ,,
6. அறுப்புக்கோட்டைத் தாலூகா ... 66
7. திருவாடானைத் தாலூகா ... 67
8. சாத்தூர்த் தாலூகா .... ,,
9 ஸ்ரீவில்லிபுத்தூர்த் தாலூகா ... 68
ஜில்லா சரித்திரம் ... 72
அரைத்தன விளக்கம் ... 77



இராமநாதபுரம் ஜில்லா
ஸ்கேல் 1 அங் = 30 மைல்.
3000 அடி
1200 அடி
600 அடி
கடல்மட்டம்
மலை
ஆறு
ஜமீன் எல்லை
தாலூகா எல்லை
சிவகங்கை
தாலூகா
பரமகுடி
இராமநாதபுரம்
தாலூகா
முதுகுளத்தூர்
இராமேசுவரம்
புதுக்கோட்டை
தஞ்சாவூர்
மன்னார் வளைகுடா
பாகு ஜலசந்தி
திருநெல்வேலி ஜில்லா
மதுரை ஜில்லா
C.V.J.

நான்காம் வகுப்புப்
பூகோள சாஸ்திரம்.

நான்கு திசைகள்.

நமக்குக் கைகள் எத்தனை? அவற்றில் எந்தக் கை எழுத உபயோகப்படுகிறது? எந்தக் கை உணவை எடுத்துச் சாப்பிட உதவுகிறது? எந்தக்கை பெரியோர்களிடமிருந்து ஏதேனும் ஒரு பொருளை வாங்குகிறது? வலது கை அல்லவா? இன்னொரு கையை நாம் எந்தக் கை என்கிறோம்? இடது கை என்கிறோம். உங்கள் பக்கத்திலிருக்கும் பையன் யார்? பொருள்கள் எவை? என்று கேட்டால், என்ன சொல்லுவீர்கள்? உங்களுக்கு வலது கைப் பக்கம் அல்லது இடதுகைப் பக்கம் இருக்கிறது என்பீர்கள். உங்கள் வலப்பக்கம் இருக்கும் பையன் யார்? இடப்பக்கம் இருக்கும் பையன் யார்? உங்களுக்கு முன்பக்கமும் பின் பக்கமும் எவை உள்ளன? நாம் இப்போது அறிந்த வலப்பக்கம், இடப்பக்கம், முன்பக்கம், பின்பக்கம் என்பன எக்காலத்தும் ஒரே நிலை பெற்றனவாய் இல்லை. அது எப்படி என்று பார்ப்போம். உங்களில் இருவர் ஒரே வரிசையில் நின்றால், ஒருவனுடைய வலப்பக்கம் மற்றவனுக்கு இடப்பக்கம் அல்லவா? அப்படியே ஒருவனுடைய இடப்பக்கம் மற்றவனுக்கு வலப்பக்கம் ஆகிறது. ஏனவே வலப்பக்கமும் இடப்பக்கமும், நிற்கும் நிலைமைக்கு ஏற்றபடி மாறுகின்றன. இவ்விதம் நிலைமைக்கு ஏற்றவாறு மாறுபடாமல், எல்லார்க்கும் ஒரே மாதிரியான பக்கங்கள் உண்டு. அவற்றுக்குத்தான் திசைகள் என்று பெயர்.

திசைகள்.





பூமியின் திசைகளை அறிதல்.

அதிகாலையில் நீங்கள் எழுந்திருந்தால், வரவர இருட்டுக் குறைந்து, வெளிச்சம் வரக் காண்பீர்கள். இவ் வெளிச்சத்திற்குக் காரணம் என்ன? சூரியன் உதிப்பதே.

எந்தத் திசையில் சூரியன் உதிக்கிறதோ, அந்தத் திசைதான் கிழக்கு, சூரியன் உயர ஏறி வரவர வெளிச்சம் அதிகரிப்பதை நீங்கள் காண்கிறீர்கள். நடுமத்தியானம் 12 மணிக்குச் சூரியன் எவ்விடத்தில் காணப்படுகிறது பாருங்கள். மாலை வேளையில் நீங்கள் பள்ளிக்கூடத்திலிருந்து திரும்புகையில் வரவர வெளிச்சம் குறைந்து இருட்டு மூடி வந்தையும் பார்ப்பீர்கள். அந்த மாலை வேளையில் சூரியன் அஸ்தமிக்கும் திசையே மேற்கு. சூரியன் உதித்திருக்கையில் நீங்கள் சூரியனை நோக்கி நிற்கும் பொழுது உங்கள் வலது கைப்பக்கம் இருக்கும் திசை தெற்கு. இடது கைப்பக்கம் இருக்கும் திசையே வடக்கு ஆகும். இத்திசைகள் எவர்க்கும் மாறுபடாமல் நிலையாய் இருக்கின்றன அன்றோ?



படத்தில் திசைகளை அறிதல்.

பூமியின் திசைகளை அறியும் வகையை நீங்கள் தெரிந்துகொண்டீர்கள். ஆனால் படத்தில் திசைகளை அறிவது எப்படி? உங்கள் பள்ளிக்கூடத்தில் ஒரு பூகோளப் படம் சுவரில் தொங்கவிட்டிருப்பதாக வைத்துக்கொள்ளுங்கள். இதற்கு எதிரே நீங்கள் நின்றால், உங்கள் தலைப் பக்கம், அதாவது படத்தின் தலைப்பக்கம் வடக்கு, அடிப் பக்கம் தெற்கு, உங்கள் வலதுகைப் பக்கம் கிழக்கு, இடது கைப்பக்கம் மேற்கு என்று தெரிந்து கொள்ளுங்கள். எந்தப் பூகோளப் படத்திலும் திசைகள் இந்த முறைப்படியே மாறாமல் குறிக்கப்பட்டிருக்கின்றன. இந்த விஷயத்தை மேலே காட்டிய படத்திற் பாருங்கள்.

எட்டுத்திசைகள்.

இதுவரையில் கிழக்கு, மேற்கு, தெற்கு, வடக்கு என்ற நான்கு திசைகளைப் பற்றி அறிந்தீர்கள். இவற்றைத் தவிர உபதிசைகள் அல்லது கோணதிசைகள் என்ற வேறு திசைகளும் உள்ளன. அவற்றைப்பற்றி இங்கேசொல்வோம்.



காலையில் நாம் சூரியனைப் பார்த்து நின்றால், கிழக்குத் திசையைப் பார்க்கிறோம். இந்தத்திசைக்கும் நமது வலதுகை குறிக்கும் தெற்குத் திசைக்கும் சம மத்தியில் உள்ள உபதிசைக்குத் தென்கிழக்கு என்று பெயர். தெற்குக்கும் மேற்குக்கும் நடுவிலுள்ளது தென்மேற்கு. மேற்குக்கும் வடக்குக்கும் மத்தியிலுள்ளது வடமேற்கு, வடக்குக்கும் கிழக்குக்கும் மத்தியிலுள்ளது வடகிழக்கு, எனப்படும். எனவே இப்போது நாம் அறிந்த உபதிசைகள் நான்கும், முன்பு அறிந்த திசைகள் நான்கும் சேர்ந்து எட்டுத்திசைகள் ஆகின்றன. இந்தத் திசைகளன்றிப் பூமிக்கு மேல், கீழ் என்ற இரண்டு திசைகளும் உண்டு.

அப்பியாசம்—வடக்கிலிருந்து ஆரம்பித்து உபதிசைகளை விடாமல் வரிசையாகச் சொல்லு. வடகிழக்குக்கு நேர் எதிராக உள்ள திசையின் பெயர் என்ன?

நக்ஷத்திரங்களும், திசைகளும்.

பகலில் சூரியனை வைத்துத் திசைகளை அறிகிறோம். சூரியன் இரவில் தெரிவதில்லை. அப்போது ஏதேனும்

ஒரு புது இடத்திற்குச் சென்றால் அங்குத் திசைகளை எப்படி அறிவது? அதற்கு ஒருஉபாயம் உண்டு.

இரவில் வானத்தைப் பார்த்தால் பல நக்ஷத்திரங்கள் மின்னிக்கொண் டிருப்பதைக் காணலாம். அவை பகலில் நமது கண்ணுக்குப் புலப்படா. ஏனெனில் சூரிய வெளிச்சத்தில் ஒரு விளக்கை வைத்தால் அது மங்கிக் காணப்படுகிறதுபோல அதிகமான சூரிய வெளிச்சத்தில் நக்ஷத்திரங்களின் ஒளி மங்கிவிடுகின்றன. இரவில் சூரிய வெளிச்சம் இல்லாததால் அவை நன்கு தெரிகின்றன.

இரவில் ஒரு மைதானத்திற் சென்று ஆகாயத்தில் எல்லாப்பக்கத்திலும் நன்கு கவனித்துப் பாருங்கள். ஒரு திசையில் இப்படத்தில் காட்டியிருப்பது போல், ஒரு நக்ஷத்திரக் கூட்டம் காணப்படும். அக்கூட்டத்தில் ஒரு நக்ஷத்திரம் பெரிது. அதன் சமீபத்தில் வேறு நக்ஷத்திரங்கள் படத்திற் காட்டியபடி உண்டு. அந்தப் பெரிய நக்ஷத்திரத்துக்குத்துருவநக்ஷத்திரம் என்று பெயர். இந்த நக்ஷத்திரம், எப்போதும் மாறாமல் வடதிசையிலேயே காணப்படும். ஆகவே இந்தத் துருவ நக்ஷத்திரம் காணப்படும் திசை வடக்கு. இதை அறிந்தால் மற்றதிசைகளை இலகுவாய் அறியலாம். நாம் துருவ நக்ஷத்திரத்தை நோக்கி நின்றால் நமது பின்புறம் உள்ள திசை எது? வலப்பக்கம் உள்ள திசை எது? இடப்பக்கம் உள்ள திசை எது?



திசை அறி கருவி. (Compass)

இதுவரையில் நாம் திசைகளை இரவிலும் பகலிலும் அறியும் விதத்தைத் தெரிந்துகொண்டோம். இந்த மாதிரி சில சமயங்களில் கண்டு பிடிக்க முடியாது. ஒரு சமயத்தில் பகலில் சூரியனையும், இரவில் நக்ஷத்திரங்களையும் இருண்ட மேகம் நன்றாய் மறைத்துவிடும். அப்போது நாம் திசைகளை அறிவது எப்படி ?



எந்த நேரத்திலும் எந்த இடத்திலும் திசை அறிவதற்கு ஒரு இயந்திரம் இருக்கிறது. காந்த ஊசி என்று ஒரு வஸ்து உண்டு. அது இரும்பை இழுக்கக் கூடியது. அதன் ஒரு நுனியில் ஓர் அடையாளம் இடப்பட்டிருக்கும். இந்த ஊசியின் நடுவில் ஒரு கயிற்றைக் கட்டித் தொங்கவிட்டால் அடையாளமுள்ள நுனி எப்போதும் வடதிசையையே காட்டி நிற்கும். அதை நாம் எப்படி அசைத்துவிட்டாலும், அது ஆடிஆடித் திரும்பி அதன் அடையாளமுள்ள நுனி வடதிசையை நோக்கியே நிற்கும் வடதிசையை நாம் அறிந்தால் பிற திசைகளை அறிதல் சுலபம். காந்த ஊசியின் ஒரு நுனி வடக்கே நோக்கி இருக்குமென்பதைக் கண்டீர்கள். இந்தக் குணமுள்ள ஊசியால் நமக்குப் பல நன்மைகள் உண்டு. அதை வைத்துச் செய்யப்பட்ட ஒரு கருவியால் எந்த நேரத்திலும் எந்த இடத்திலும் நாம் திசைகளைச் சுலபமாய் அறியலாம்.



கைக்காம்பஸ் என்பது ஒரு கைக்கெடிகாரம்போல் இருக்கும் அதன் உருவத்தைப் பக்கத்திலுள்ள படத்திற் பாருங்கள். கெடிகாரம் காலம் காட்டும். காம்பஸ் திசைகளைக் காட்டும். கைக்கெடிகாரத்தில் நேரம் காட்டும் கருவிக்கு முள் என்று பெயர். காம்பஸில் திசைகாட்டும் கருவிக்கு ஊசி என்று பெயர்.

காம்பஸின் பாகங்கள்.

1. பெட்டி—இதற்குள்ளே தான் காந்தஊசி கெட்டுப்போகாமல் வைக்கப்பட்டிருக்கிறது.

2. கண்ணாடி அல்லது மூடி—கெடிகாரத்தில் மணி பார்க்கும் பாகத்தையும் முள்ளையும் கண்ணாடி மூடியிருப்பதை நீங்கள் பார்த்திருப்பீர்கள். அதைப்போலவே காம்பஸின் ஊசியைக் கண்ணாடியானது மூடியிருக்கும். காந்த ஊசியும் அது காட்டும் திசையும் தூசி அடைந்து போகாமல் அல்லது வேறு விதமாகக் கெட்டுப்போகாமல், கண்ணாடி பாதுகாக்கிறது.

3. காந்தஊசி—இதுவே திசைகளைக் காட்டுகிறது.

4. சிறியமுளை—அக்கருவியின் மத்தியில் இருக்கும். இதன்மேலே தான் காந்த ஊசி நிற்கிறது.

5 பெட்டியின் அடி—ஊசியின் கீழுள்ள இந்த அட்டையில் முக்கியமான நாலு திக்குகளும் 4. உப திக்குகளும் வரையப்பட்டிருக்கின்றன.

சித்திரம், நிலப்படம். (பிளான்)

நீங்கள் பல சித்திரங்களை உங்கள் புஸ்தகத்தில் பார்த்திருக்கிறீர்கள். உதாரணமாக, மனிதர்கள், மிருகங்கள், மரங்கள், வீடுகள், பாத்திரங்கள் முதலியவற்றைப் பார்த்திருப்பீர்கள். ஒரு ரூபாவையும் பார்த்திருக்கிறீர்கள். அதன்

உருவப்படம் அல்லது சித்திரம் இப்பக்கத்திலுள்ள படத்தில் இருக்கிறது. அதில் என்ன என்ன பார்க்கிறீர்கள்? நமது சக்கரவர்த்தி உருவமும் சில எழுத்துக்களும்



உள்ளன. இனி ஒரு ரூபாவை எடுத்துத் தரைமேல் வைத்து அதைச் சுற்றிக் குச்சியால் கோடு வரையுங்கள்.

இப்போது ரூபாவைச்சுற்றி வரைந்த வட்டம் ரூபாவின் சித்திரமன்று. சித்திரம் என்றால் அதில் முன்போல் உருவமும் எழுத்துக்களும் இருக்கவேண்டும். அவை நீங்கள் எழுதிய படத்தில் இல்லை. ரூபாவைச்சுற்றித் தரையில் வரைந்த படம் ரூபாவின் தரைப்படம் அல்லது நிலப்படம் அல்லது பிளான் என்று சொல்லப்படும்.



உங்கள் புஸ்தகத்தைக் கற்பலகையின்மேல் வைத்து அப்புஸ்தகத்தின் ஒருஓரத்தைஒட்டி ஒரு கோடு வரையுங்கள். அது அப்புஸ்தகத்தின் ஒரு பக்கத்து அளவைக் காட்டுகிறது. அந்தக் கோட்டின் தொடர்ச்சியாய்ப்புஸ்தகத்தை ஒட்டியே இன்னொரு பக்கத்திற் கோடு போடுங்கள். அதேமாதிரி மற்ற இரண்டு பக்கங்களிலும் வரையுங்கள். இனிப் புஸ்தகத்தை எடுத்துவிட்டால் கற்பலகையில் வரைந்த நான்கு கோடுகளும் ஒரு உருவத்தைக் காட்டுகின்றன. அவ்வுருவத்துக்கும் புஸ்தகத்தின் பிளான் அல்லது தரைப்படம் என்று பெயர்.

ஸ்கேல் விபரம்.

தரைப்படம் அல்லது பிளானில், ஒருவஸ்துவின் நீள மும் அகலமும் தான் தெரியும். முன்னெழுதிய புஸ்தகத் தின் பிளான், புஸ்தக அளவு உள்ளபடியே நீங்கள்எழுதிய பிளான். உங்கள் கற்பலகையைவிடப் பெரிய வஸ்துவின் பிளானை உள்ளபடியே உங்கள் கற்பலகையில் எழுத முடியுமா? முடியாது. அதற்கு என்ன செய்வீர்கள்?

எந்தப் பொருளின் பிளானை நீங்கள் வரைய விரும்பு கிறிர்களோ, அதன் ,நீளத்தையும் அகலத்தையும் சம மாகக் குறைத்து உங்கள் கறுப்புப் பலகையிலாவது, பெரிய காகிதத்திலாவது வரைந்து விடலாம்.

ஒரு வஸ்துவின் நீளத்தை நீங்கள் எவ்வாறு கண்டு பிடிப்பீர்கள்? அதை அளந்து பார்த்தால் தெரியும் அல் லவா? எதனுல் அளப்பது? கையாலும் பாதத்தாலும் அளந்து சொல்லலாம். ஆனுல் எல்லாருடைய கைகளின் அளவும் பாதங்களின் அளவும் ஒத்து இராது. எப்போ தும் ஒரே அளவை வித்தியாசம் இல்லாமல் காட்ட அளவு கோல்கள் ஏற்பட்டிருக்கின்றன. உங்களில் ஒவ்வொரு வரும் ஒரு அளவுகோல் வைத்திருக்கிறீர்கள் அல்லவா? அது.ஒரு அடி என்ற அளவைக் காட்டும் குச்சி. அதை அடிக்குச்சி என்று சொல்லுகிறீர்கள். இந்தக் குச்சியால் எந்தவஸ்துவின் நீளத்தையும் அகலத்தையம் அளக்கலாம்.

முதலில் ஒரு துணியை எடுத்துக்கொண்டு அது எத் தனை குச்சி நீளம், எத்தனை குச்சி அகலம் என்று அளந்து பார்த்துச் சொல்லுங்கள்.

இப்போது அடிக்குச்சியை எடுத்துக் கவனியுங்கள். ஒரு அடி என்பது 12 அங்குலம் என்று உங்களுக்குத்தெரியும். நீங்கள் எடுத்துக்கொண்ட அக்குச்சியை 12 பாகங்களாகப் பிரித்துக் காட்டியிருக்கிறதை அறிவீர்கள். நீங்கள் இப்பொழுது எந்தப் பெரியபொருளை அளக்கவிரும்புகிறீர்களோ, அதன் நீளம் அகலம் அடிக்கணக்கில் இருப்பதைக் குறைத்து முதலில் அங்குலக் கணக்காக மாற்றிக் கொள்ளலாம்.

உதாரணமாக, ஒரு அறையின் நீளத்தையும் அகலத்தையும் அளந்து பார்க்குங்கால், 36 அடி நீளமும் 20 அடி அகலமும் இருக்கிறதாக வைத்துக் கொள்ளுங்கள். இந்த நீளமும் அகலமும் உள்ள பிளானை, அந்த அறையின் அளவின்படி உங்கள் கற்பலகையில் வரையமுடியுமா? முடியாது. இனி அறையின் பிளானை வரைய வேண்டுமானால் உங்கள் அடிக்குச்சியின் ஒவ்வொரு அடியையும் ஒரு அங்குலமாகப் பாவித்து முதலில் கறுப்புப் பலகையில் (Black-Board) பிளானை எழுதுங்கள். அப்போது அறையின்நீளமாகிய 36 அடி 36 அங்குலமாகவும், அகலமாகிய 20 அடி 20 அங்குலமாகவும், கறுப்புப் பலகையில் எழுதிய பிளானில் அமையும்.

இனி உங்களுடைய கற்பலகையிலும் அறையின் பிளானை வரையலாம். எப்படியெனில், அறையின் ஒவ்வொரு அடியையும் $\frac{1}{4}$ அங்குலமாகப் பாவித்து எழுதுங்கள். இப்போது அறையின் நீளமாகிய 36 அடியானது 9 அங்குலமாகவும் அகலமாகிய 20 அடியானது 5 அங்குலமாகவும் கற்பலகையில் அமையும்.

அப்படியே 10 அடியை ஒரு அங்குலமாகவும், 100 அடியை ஒரு அங்குலமாகவும் வைத்துப் பிளான் எழுதலாம். இவ்வாறே சிறிய உருவத்தைப் பெரிய அளவிலும் எழுதலாம். இப்படி எழுதுவதற்குத்தான் 'ஸ்கேலின்படி தரைப்படம் எழுதல்' என்று பெயர்.

இப்படியே ஒரு பள்ளிக்கூடத்தின் தரைப்படத்தையும் வரையலாம். முதலாவது காம்பவுண்டுச் சுவர்களை நாம் வரையவேண்டும். அவற்றின் நீளமும் அகலமும் நமக்கு முதலில் தெரியவேண்டுமல்லவா? அளந்து பார்த்தால் தென்வடல் நீளம் 200 அடி, கிழமேல் அகலம் 140 அடி இருக்கின்றன வென்று வைத்துக்கொள்வோம். 40 அடிக்கு ஒரு அங்குலம் ஸ்கேல் வைத்தால் நீளமாகிய 200 அடி 5 அங்குலமாகப் பிளானில் அமையும். அப்படியே அகலமாகிய 140 அடி $3\frac{1}{2}$ அங்குலத்தில் அமையும். 5 அங்குலம் தென்வடல் நீளமும், $3\frac{1}{2}$ அங்குலம் கிழமேல் அகலமும் உள்ள ஒரு நீண்ட சதுரம் எழுதுக. இப்படி எழுதும்போது பள்ளிக்கூடத்தின் வடபக்கம் பிளானில் தலைப்பக்கத்திலும், தென்பக்கம் பிளானில் அடிப்பக்கத்திலும் அமையவேண்டும். காம்பவுண்டின் தெற்குச் சுவரில் 20 அடி அகலமுள்ள ஒரு வாசல் மத்தியில் இருப்பதாக வைத்துக்கொள்வோம். அந்த வாசலைக் குறிக்க ஸ்கேலின்படி அரை அங்குலக் கோட்டை மத்தியில் அழித்துவிடுங்கள். காம்பவுண்டுச் சுவரின் கனத்தைக் குறிக்கு முன் எழுதின கோட்டைச்சுற்றி மற்றொரு கோடு வரையுங்கள். கனத்தையும் ஸ்கேலின்படி வரையவேண்டும்.

இனி வகுப்பறைகளின் பிளானை வரைவோம். முதலில் காம்பவுண்டின் வடக்குச்சுவருக்கும்பள்ளிக்கூடத்துக்கும் எவ்வளவு தூரம் இருக்கிறதென்று அளக்கவேண்டும்


வடக்கு
140 அடி
கக்கூஸ்
விளையாடும் இடம்
120 அடி
3
4
2
120 அடி
மே
கி
200 அடி
60 அடி
5
1
30 அடி
தோட்டம்
தோட்டம்
20'
தெற்கு

ஸ்கேல் 1" = 40'

அப்படி அளந்ததில், 40 அடி இருக்கிறது. பள்ளிக்கூட வடக்குச் சுவரின் நீளம் 120 அடி. அப்படியாயின், பள்ளிக்கூட வடக்குச் சுவரிலிருந்து ஒரு அங்குலத்திற்குத் தெற்கே, 3 அங்குல நீளமுள்ள ஒருகோட்டைக்கிழமேலாக வரையவேண்டும். இப்போது பள்ளிக்கூடத்தின் வடக்குச் சுவர் எழுதிவிட்டோம். இனிக் கிழக்கு மேற்குச் சுவர்களை அளக்கவேண்டும். அவை ஒவ்வொன்றும் 120 அடி நீளமுள்ளது. முன் வரைந்த கோட்டின் ஒரு நுனியிலிருந்து தெற்காக 3 அங்குலக் கோடு ஒன்று வரையுங்கள். இது போலவே மற்ற கோட்டிலிருந்தும் மற்றொரு 3 அங்குலக் கோடு வரையுங்கள். இப்போது பள்ளிக்கூடத்துக் கிழக்கு வடக்கு மேற்குச் சுவர்களை வரைந்தோம். இனிமேல் ஒவ்வொரு அறையின் நீளமும் அகலமும் தெரியவேண்டும். அளந்ததில் ஒவ்வொரு அறையும் 60 அடி நீளமும் 30 அடி அகலமும் உள்ளது. முதலில் பள்ளிக்கூடத்தின் கிழக்குச் சுவருக்கு மேற்குப் பக்கத்தில் ¾ அங்குல நீளத்தில் மேலேயிருந்து ஒரு கோடு போடுங்கள். அதுபோலவே மேற்குச் சுவருக்குக் கிழக்குப் பக்கத்தில் ஸ்கேல்படி ¾ அங்குல அகலத்தில் 3 அங்குல நீளத்தில் ஒரு சமதூரக் கோடு வரையுங்கள். இனிமேல் தெற்குச் சுவரைக் காட்டக் கிழக்கு நுனியையும் அதன் அடுத்த கோட்டின் நுனியையும் சேருங்கள். அதுபோலவே மேற்குப் பக்கத்திலுள்ள கோட்டின் நுனியையும் அதற்குக் கிழக்கே ¾ அங்குல சமதூரத்தில் வரைந்த கோட்டின் நுனியையும் சேருங்கள்.

ஒவ்வொரு அறையின் நீளமும், அகலமும் முன்னமே நமக்குத் தெரியும். முன் வரைந்த ஸ்கேலின்படி 3 அங்குல நீளமுள்ள கிழக்குக் கோட்டின் மத்தியிலிருந்து அடுத்த சமதூரக் கோட்டின் மத்திக்கு ஒரு கோடு குறுக்கே எழு

துங்கள். அதே மாதிரி மேற்குப் பக்கத்திலுள்ள கோட்டின் நடுவிலிருந்து அதை யடுத்த கோட்டுக்குக் குறுக்கே ஒரு கோடு வரையுங்கள். இப்போது கிழக்குப் பக்கத்தில் இரண்டு அறைகளும் மேற்குப் பக்கத்தில் இரண்டு அறைகளும் வரைந்தோம். இனி வடக்குப் பக்கத்து அறையைக் காட்ட வடக்குச் சுவரிலிருந்து $\frac{3}{4}$ அங்குல அகலத்திலும் $1\frac{1}{2}$ அங்குல நீளத்திலும் கிழக்கு மேற்காக இருக்கும் அறைகளைக் குறிக்கும் சுவர்வரையில் ஒரு கோடு போடுங்கள். இப்போது பள்ளிகூடத்தின் 5 அறைகளையும் எழுதிவிட்டோம்.

சுவர்களின் கனத்தைக் காட்ட முன் வரைந்த எல்லாக் கோடுகளையும் ஒட்டிச் சமதூரக் கோடுகள் வரையுங்கள். சுவரின் கனத்தை அளந்து ஸ்கேல்படி எழுதவேண்டும். கதவுகள் இருக்கும் இடத்தையும் அதன் அகலத்தையும் குறிக்க அந்தந்த இடங்களில் ஸ்கேல்படி கோடுகளை அழித்துவிடுங்கள். அப்படியே ஜன்னல்களைக் காட்ட அந்தந்த இடத்தில் குறுக்கே கோடு போடுங்கள். இப்போது பள்ளிக்கூடத்தை அளந்து அதன் பிளானை வரைந்தோம்.

கிராம நிலப்படம்.

இப்படியே உங்கள் கிராமத்தின் நிலப்படத்தையும் எழுதலாம். அதற்கு முதலில் அந்தக் கிராமத்திலுள்ளவீடுகள், தெருக்கள், கோவில்கள், வயல்கள் ஏரிகுளங்கள், நதி முதலியவை எங்குள்ளவை என்று பார்க்கவேண்டும். பிறகு அவற்றை அளந்து ஸ்கேலின்படி எழுதவேண்டும். அப்படி அளந்து எழுதுவதற்குப் பல நாட்கள் ஆகும். இங்ஙனம் தயாரித்த கிராமப்படம் உங்கள் பள்ளிக்கூடத்தில் இருக்கிறது. ஒவ்வொரு கிராமத்தின் படமும் துரைத்தனத்தாரால் தயார் செய்யப்பட்டிருக்கிறது. அதைப்

பார்த்து உங்கள் கிராமத்தின் படத்தை எழுதுங்கள். அதில் குறித்த ஸ்கேலைப் பார்த்துக் கிராமத்தின் நீளம் அகலம் எல்லைகள் என்பவைகளை எழுதுங்கள்.

உங்கள் கிராமம் போன்ற பல கிராமங்கள் சேர்ந்த தாலூகா, பல தாலுகாக்கள் சேர்ந்த ஜில்லா முதலியவற்றையும் முன் சொன்னபடி எழுதியிருக்கின்றார்கள். இவற்றுக்குப் பூகோளப்படங்கள் என்று பெயர்.

கிராமத்தைப் பார்க்கிலும் பெரிய பூகோளப் படங்களை எழுதும்போது, சிறு கிராமங்கள், பட்டணங்கள் முதலியவற்றைப் படத்தில் விவரமாக எழுதமுடியாதல்லவா? அவற்றைக் குறிப்பதற்குக் கிராமங்கள் பட்டணங்கள் உள்ள இடத்தில் சிறு புள்ளிகளை எழுதிக் குறித்திருக்கிறார்கள். மலைகள், நதிகள், ரஸ்தாக்கள் முதலியவைகளும் வெவ்வேறு விதமான குறிகளால் படங்களில் குறிக்கப்பட்டிருக்கின்றன. இவற்றை உங்கள் ஜில்லாப் படத்திற் பார்க்கலாம்.

இங்ஙனம் பல ஜில்லாக்கள் சேர்ந்தது ஒருராஜதானி. பல ராஜதானிகள் சேர்ந்தது ஒரு தேசம். பல தேசங்கள் சேர்ந்தது ஒரு கண்டம். இப்படிப் பல கண்டங்கள் சேர்ந்ததுதான் இப்பூமி.

பூமியின் உருவம்.

பூமியின் உருவம், அமைப்பு, தரையின் மேடு பள்ளம், விளை பொருள்கள் முதலிய விஷயங்களைப்பற்றிக் கற்பிக்கும் புஸ்தகத்திற்குப் 'பூகோள சாஸ்திரம்' என்று பெயர். நாம் வசிக்கும் இந்தப் பூமியானது எலுமிச்சம்பழம்போல் உருண்டையாயிருக்கிறது. ஆனால் பார்வைக்குத் தட்டையாகத் தோற்றுகிறது. ஏனெனில் பூமி முழுவதையும்

ஒரே தடவையில் நாம் பார்க்கமுடியாததால், அவ்வாறு தோற்றுகிறது. ஆனால் உண்மையில் பூமி உருண்டையாகத்தான் இருக்கிறது. உதாரணமாகப்

பக்கத்தில் உள்ளபடத்தில் காட்டியபடி ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்குப் போய்க்கொண் டிருக்கும் கப்பலை நீங்கள் பார்த்தால்,முதலில் அந்தக் கப்பலின் அடிப் பாகமும், அக்கப்பல் தூரப் போகப் போக மேற்பாகங்களும் கொஞ்சங் கொஞ்சமாய் மறையக் காண்பீர்கள்: பூமி உருண்டையா யிருப்பதால்தான் அப்படித் தெரிகிறது. உருண்டையாய் இல்லாமல் தட்டையாய் இருந்தால் அடிப்பாகம் மறையக் காரணம் இல்லை.



நாம் வசிக்கும் உருண்டை வடிவமாகிய இந்தப் பூமி மூன்று பங்கு நீராலும், ஒரு பங்கு நிலத்தாலும் ஆகியது.

பூமி, சூரியன், சந்திரன்.

நாம் வசிக்கும் இப் பூமியானது 25000 மைல் சுற்றளவுள்ளது. அதன் குறுக்களவு 8000 மைல். இப்பூமி மேற்குத் திசையிலிருந்து கிழக்குத்திசையில் சுழன்று கொண்டு போவதால், சூரியன் கிழக்கில் உதித்து மேற்கில் அஸ்தமிக்கிறதாகக் காணப்படுகிறது. உண்மையில் பூமிதான் சுற்றுகிறது. சூரியன் இருந்த இடத்திலேயே இருக்கிறது. நாம் புகைரதம் ஏறிப் பிரயாணம் போனால், நாம் செல்லும்

திசைக்கு எதிர்த்திசையை நோக்கி மரங்கள், குன்றுகள் முதலியன செவ்வனபோல் காணப்படுகின்றன அல்லவா? ஆயினும் புகைரதம்தான் ஓடுகிறதென்று நமக்குத் தெரியும். அதுபோல் பூமி வேகத்துடன் சுழலுவதால் அதன் அசைவு நமக்குப் புலப்படாமல் சூரியன் கிழக்கில் உதித்துப் பூமி சுழலும் திசைக்கு எதிர்த் திசையாகிய மேற்குப் பக்கம் போவதுபோல் காணப்படுகிறது. பூமி சுழன்றால் அதிலுள்ள ஜனங்கள், வீடுகள் முதலிய எல்லாப் பொருள்களும் கீழேவிழாமலிருக்குமா என்று நீங்கள் நினைக்கலாம். பூமி என்ற கோளத்துக்கு மற்றுமுள்ள கோளங்களைப் போலவே, சமீபத்திலுள்ள எல்லாப் பொருள்களையும் தன் மத்திய பாகத்திற்கு இழுத்துக்கொள்ளும் வல்லமை இருக்கிறது. அந்த வல்லமையை ஆகர்ஷணசக்தி என்பார்கள். அந்தச் சக்தி பூமிக்கு இருப்பதனால் ஆகாயத்தில் நாம் எதை எறிந்தாலும் முடிவில் அது பூமியில் வந்து விழுகிறது. இந்தச் சக்திதான் பூமி சுழலும்போது அதைச் சேர்ந்த பொருள்களை விழாமல் தன்னோடு இழுத்துக் கொண்டே செல்கிறது.

பூமிக்கு இரண்டுவித சலனங்கள் (அசைவுகள்) உண்டு. பம்பரம்போல் தன்னைத்தானே சுற்றிக்கொள்வது ஒன்று; சூரியனைச் சுற்றி வருவது மற்றொன்று. அது தன்னைத் தானே சுற்றிக் கொள்வதால் இரவும் பகலும் உண்டாகின்றன. அது எப்படியென்று ஒரு உதாரணத்தின் மூலமாய் விளக்குவோம்.

இருட்டு அடைந்த ஒரு அறையில் ஒரு விளக்கை ஏற்றி வையுங்கள். அதன் ஒரு பக்கத்தில், ஒரு பம்பரத்தைச் சுழற்றி விடுங்கள். பம்பரம் சுழலும்போது, அதன் ஒரு பக்கம் விளக்கு எதிரில் வந்து வெளிச்சத்தை

அடைகிறது. மற்றொரு பக்கத்துக்கு வெளிச்சம் இல்லை. பம்பரம் சிறிதுநேரம் கூட நில்லாமல் சுழன்றுகொண்டே இருப்பதனால், அதன் சில பாகங்கள் வெளிச்சத்தை அடைகின்றன; சில பாகங்கள்: இருட்டை அடைகின்றன.



விளக்குக்குப் பதிலாகச் சூரியனையும், பம்பரத்துக்குப் பதிலாகப் பூமியையும் வைத்துக்கொள்வோம். பூமி தன்னைத்தானே சுற்றிவரும்போது, அதன் சிலபாகங்கள் சூரியனுக்கு முன்வந்து வெளிச்சத்தை அடைகின்றன. மற்ற பாகங்கள் சூரிய வெளிச்சத்தை அடையமுடியாமல் இருளில் இருக்கின்றன. வெளிச்சமாயுள்ள பாகத்தைப் பகல் என்றும், இருட்டாயுள்ள பாகத்தை இரவு என்றும் சொல்லுகிறோம்.

இவ்வாறு பூமியின் ஒருபாகம் முதலில் சூரிய வெளிச்சத்தையடைந்து, மறுபடியும் இருட்டை அடைவதற்கு 12 மணி நேரம் ஆகிறது. அந்தப் பாகம் இருட்டைவிட்டு

வெளிச்சத்தைப் பெறுவதற்கு மறுபடியும் 12 மணி நேரம் ஆகிறது. ஆக ஒரு பகலும் ஒரு இரவும் சேர்ந்த நேரத்தை நாம் ஒருநாள் என்று சொல்லுகிறோம். எனவே பூமி தன்னைத்தானே சுற்றிக்கொள்வதால் பகலும் இரவும் மாறி மாறி வருகின்றன. அங்ஙனம் பூமி தன்னைத்தானே சுற்றிக்கொள்ளாவிட்டால் என்ன நேரிடும்? சூரியனுக்கு எதிரிலுள்ள பூமியின் பாகத்துக்கு எப்போதும் பகலும், மற்ற பாகத்துக்கு எப்போதும் இருட்டும் உண்டு.

முன் காட்டிய பம்பர உதாரணத்தில், அப் பம்பரம் தன்னைத் தானே சுற்றிக்கொள்வது மன்றி, தன்னிருப்பிடத்தைவிட்டுச் சில வேளைகளில் நகருவதையும் நீங்கள் பார்த்திருக்கலாம். அதுபோல் இப்பூமியும் தன்னைத்தானே சுற்றிக்கொள்வதோடு தானிருக்குமிடத்தை விட்டு நகர்ந்து, சூரியனுடைய ஆகர்ஷணசக்தியால் இழுக்கப்பட்டுச் சூரியனைச் சுற்றுகிறது.

பூமி இங்ஙனம் சூரியனைச் சுற்றிவர $365\frac{1}{4}$ நாள்கள் (அதாவது ஒரு வருஷம்) ஆகும். பூமியைப்போலவே பல கிரகங்கள் சூரியனைச் சுற்றி வருகின்றன. சூரியன் நமது பூமியைவிட 13 லக்ஷம் மடங்கு பெரியது. அது சுமார் பத்துக்கோடி மைலுக்கு அப்பால் இருப்பதால், மிகச் சிறிதாகக் காணப்படுகிறது. நீங்கள் பறக்கவிடும் பட்டம் மேலே போகப்போகச் சிறிதாய்க் காணப்படுகிறது. அது போல் தூரத்திலுள்ள வஸ்துக்கள் சிறியவையாகத்தான் காணப்படும். சூரியன் உருண்டை வடிவமான அக்கினி கோளம். அது தன்னைத்தானே சுற்றிக் கொள்ளுகிறது. ஆனால் வேறு கிரகங்களை அது சுற்றுகிறதில்லை.

சந்திரன் பூமியைச் சுற்றிக்கொண்டு வருகிற ஒரு உபக்கிரகம். பூமி சூரியனைச் சுற்றி வரும்போது, பூமியோடு கூடவே சந்திரன் சூரியனைச் சுற்றுகிறது. சந்திரன் பூமியைச் சுற்றிவர 29 நாளும், பூமியுடன் சூரியனைச் சுற்றிவர ஒரு வருஷமும் செல்லும். அது இயற்கையில் வெளிச்சம் உள்ளது அன்று. சூரியனிடத்திலிருந்து அது வெளிச்சத்தை அடைந்து நமக்கும் கொடுக்கிறது.

கிராமமும், சுற்றுப்புறமும்.

நாம் ஒரு பெரிய கிராமத்தில் வசிப்பதாக வைத்துக் கொள்வோம். அந்தக் கிராமத்தில் அநேக வீடுகள் வரிசை வரிசையாயிருக்கும். அப்படி அநேக வீடுகள் வரிசையாயிருப்பதைத் தெரு என்கிறோம். உங்கள் கிராமத்தில் எத்தனை தெருக்கள் இருக்கின்றன? கோவிலும் பள்ளிக்கூடமும் உங்கள் ஊரிலேயே இருக்கக்காண்பீர்கள். நீங்கள் ஏதேனும் ஒரு சாமான் வாங்கவேண்டியதிருந்தால் எங்கே வாங்குகிறீர்கள்? உங்கள் கிராமத்தில் எத்தனை கடைகள் இருக்கின்றன? பெரிய கிராமங்களில் கடைவீதியும், தபாலாபீசும், சத்திரங்களும் இருக்கக் காண்பீர்கள்.

இனி, கிராமத்துக்கு வெளியில் உலாவப்போனால், அங்கே அநேக பொருள்களைப் பார்ப்பீர்கள். சில இடங்களில் மா, ஆல், அத்தி, அரசு, வேம்பு, புளி முதலான மரங்கள் வளர்ந்து காணப்படும். பல மரங்கள் சேர்ந்து ஒரு இடத்தில் வளர்ந்து இருந்தால் அதற்குத் தோப்பு என்றுபெயர். இத்தோப்புகளையும் தனிமரங்களையும் தவிர நெல், வாழை, சோளம், காய்,கறிகள் விளையும்நிலங்களையும் பார்ப்பீர்கள்.



பொதுவாக நிலங்கள் இரண்டு வகைப்பட்டவை. அவை நன்செய் நிலங்கள், புன்செய் நிலங்கள் எனப்படும். நெல் வயலைப்பாருங்கள். நெற்பயிரிடுவதற்குத் தண்ணீர் எப்போதும் வேண்டும். நெல்லை எப்படிப் பயிர் செய்கிறார்கள் தெரியுமா? நெற்பயிரிடும் நன்செய் நிலத்தில். முதலில் தண்ணீர் கட்டி உழுது சேறாக்கி உரமிடுகிறார்கள். நெல் பயிராகி அறுப்புமுடியும்வரை நிலத்தில்தண்ணீர் இருக்கவேண்டும். காய்ந்த நன்செய்நிலத்தைஉழுதால் மண் கட்டிகட்டியாகப் பெயரும். அதில் தண்ணீரைப் பெருக்கினால் நிலம் தொளியாகும். நிலங்கள் நல்ல பலனைத்தர வேண்டுமானால் அவற்றுக்கு எரு முதலிய உரம் போடவேண்டும். ஆடுமாடுகளின் சாணியும், மக்கிப்போன இலைதளிர்களும் ஏற்ற எருவாகும். சில இடங்களில் பிண்ணாக்கு, எலும்புததூள் முதலியவற்றையும் எருவாக் உபயோகிக்கிறார்கள். நெல்முக்கியமான நன்செய்ப்பயிர். அதைத்தவிர வாழை, வெற்றிலை, கரும்பு, சடம்பு முதலியனவும் பயிராக்கப்படுகின்றன.

தண்ணீர் பாயாத மேட்டு நிலங்களைப் புன்செய்கள் என்போம். சோளம், கம்பு, கேழ்வரகு, தினை, சாமை, குதிரைவாலி, உழுந்து, துவரை, மொச்சை என்பன இந்த நிலங்களில் பயிரிடப்படும். புன்செய்கள் முக்கியமாகக் கரிசல் செவ்வல் என இருவகைப்படும். கரிசலில் கறுப்புநிறமுள்ள மண்ணும் சிறுகற்களும் சேர்ந்திருக்கும். கரிசலில் விசேஷமாகப் பருத்தியே செழித்து வளரும். செவ்வல் நிலம், செம்மண்ணும் கொஞ்சம் மணலும் கலந்துள்ளது. அந்நிலங்களில் முற்கூறிய தானியங்களும் பயறு வகைகளும் பயிராக்கப்படுகின்றன. தண்ணீர் தட்டான மேட்டு நன்செய் நிலங்களில் அடிக்கடி புன்செய்ப் பயிர்கள் பயிரிடப்படுகின்றன. சிறிதளவு வேண்டிய ஜலத்திற்காகக் கிணற்று நீரை இறைத்தும், மழையின் உதவியாலும் வெண்டி, மிளகாய், கொத்தவரை, வெங்காயம் முதலியன விளைவிக்கப்படுகின்றன. சில நிலங்கள் உப்பு சம்பந்தமான மேட்டு நிலமாயிருக்கும். அவற்றில் ஒன்றும் விளையாது. ஆயினும் அதன் உவர்மண் துணிகளின் அழுக்கைப்போக்க உபயோகப்படுகின்றது. அம்மண் வண்ணானுக்குத் தேவை.

கடற்கரையிலும் வேறு மணற் பாங்கான இடங்களிலும், தென்னை, பனை, ஈச்சு, சவுக்கு உடை முதலியன நன்கு உண்டாகின்றன.

கிராமங்களின் சுற்றுப்பக்கங்களில் சில இடங்கள் பயிரிடப்படாமல் தரிசு நிலமா யிருக்கும், அவற்றில் வளரும் புல்லை ஆடுமாடுகள் மேய்கின்றன. அந்நிலத்துக்கு மேய்ச்சல் கால்கள் என்று பெயர்.

உங்கள் ஊரில், செங்கற் காளவாய்கள் இருக்கின்றனவா? அவை பெரும்பாலும் வயல்களிலாவது கண்மாயின் பக்கத்திலாவது வைக்கப்படுகின்றன. செங்கல் எதற்கு உபயோ-

கப்படுகின்றது? முதலில் களிமண்ணைத் தோண்டித் தண்ணீர் வார்த்துப் பக்குவமாகக் குழைப்பார்கள். பிறகு கட்டளை (அச்சு) களால் அறுத்துப் பச்சைக்கல்லைக் காய வைத்து எடுப்பார்கள். அதன் பிறகு அவற்றை அடுக்கிக் கட்டைகளைச் சுற்றிவைத்துக் கொளுத்திச் செங்கல் செய்கிறார்கள். சுண்ணாம்பும் நமக்குப் பல காரியங்களுக்குஉபயோகமாகின்றது. அது எப்படிக் கிடைக்கிறது தெரியுமா? சுண்ணாம்புக்கல்லையும், கரியையும் கலந்து காளவாயிற் போட்டுக் கொளுத்தினால் கரியெல்லாம் எரிந்துபோகும். கல்மட்டும் சுண்ணாம்புக்கு உபயோகமாகிறது. கொஞ்சம் சுண்ணாம்பு வேண்டியதாய் இருந்தால் கிளிஞ்சில்களைக் கல்லுக்குப் பிரதியாக உபயோகிக்கிறார்கள்.

மண், சுண்ணாம்புக்கல், சருக்கல் என்பன பூமியிலிருந்து வெட்டி எடுக்கப்படுகின்றன. பூமியிலிருந்து வெட்டி எடுக்கப்படும் பொருள்களுக்கு உலோகங்கள் என்று பெயர். தங்கம், வெள்ளி, இரும்பு, தாமிரம், ஈயம் என்பன பூமியிலிருந்து கிடைக்கும் உலோகங்களே.

கைத்தொழில்கள்.

உயிர்ப்பிராணிகள் எல்லாவற்றுக்கும் உணவு அவசியம். ஆதலால், நமக்கும் உணவு வேண்டும். ஒருநாள் அல்லது ஒருவேளை உணவு இல்லாவிட்டால் நாம் என்ன பாடுபடுகிறோம்! அதனைத் தேடுவதற்கே எல்லோரும் சம்பாதிக்கிறார்கள். அது எங்கே கிடைக்குமோ அங்கேயே மனிதர்கள் அதிகமாக வசிப்பார்கள். நமது நாட்டில் நெல், துவரை, உழுந்து, கேழ்வரகு, சோளம், தினை, முதலிய சில தானியங்களும், புளி, வாழை, மா, பலா

முதலிய பழங்களும் ஆகாரத்துக்கு உபயோகிக்கிறோம். இவை நீர் வளமும், நிலவளமுமுள்ள இடங்களில் உண்டாகின்றன. இவ்விடங்களில்தான் பெரிய நகரங்களும், கிராமங்களும் கட்டப்பட்டிருக்கின்றன. அங்குதான் நிலங்களை யுடையவர்களும் அவர்களுக்குதவி செய்யும் குடியானவர்களும் வாழ்வார்கள். உங்களுடைய ஊரில் குடியானவன், நிலம் உழுவதைப் பார்த்திருக்கிறீர்களா ? இரண்டு மாடுகள் இழுத்துச் செல்லும் கலப்பையால் நிலத்திலுள்ள மண் கீழும் மேலும் கிளறப்படுகிறது. குடியானவன் அப்படி உழுதபிறகு, பயிருக்குத் தக்கபடிபாத்திகள் கட்டி விதை விதைப்பான். பாத்திகள் கட்டாமல் பயிராக்கப்படும் பயிர்களும் உண்டு. அப்படி விதைத்த விதை பயிராகி வளர்ந்து முதிர்ந்து பூத்துக் கதிரீனும். சில பயிர்கள் இரண்டு மூன்று மாதங்களில் பலன் கொடுக்கும். சில பயிர்கள் ஐந்தாறு மாதங்களில் பலன் தரும். அப்பயிர்களிலிருந்து உண்டாகும் தானியங்களைக் குடியானவர்கள் வீடு கொண்டு வந்து சேர்ப்பார்கள். குடியானவர்கள் தாமே அவ்வளவு பொருள்களையும் தங்கள் வீடுகளில் வைத்துக்கொள்ள முடியுமா ? ஆசாரி, சேணியன், இடையன், வண்ணான், அம்பட்டன் முதலிய தொழிலாளர் உதவி அவர்களுக்கு வேண்டுமன்றோ? ஆதலால் தங்களுக்குக் கிடைத்த விளைபொருள்களை அவர்களுக்கும் பங்கிட்டுக் கொடுப்பார்கள். அவற்றைப்பெற்று அவர்கள் ஜீவிப்பார்கள்.

ஆசாரிகளில் கருமான், தச்சன், கன்னான், தட்டான் என்ற நான்கு பிரிவினர்கள் இருக்கிறார்கள். இவர்களில் கருமான், இரும்பு என்ற உலோகத்தாற் பல சாமான்களைச் செய்கிறான். அவனைக் கொல்லன் என்று சொல்லுவார்கள். இரும்பு மிகவும் உபயோகமான உலோகம்.



கருமான்.

கொல்லன் இரும்பால் சாமான்கள் செய்யாவிட்டால் உலகத்தில் எந்தக் கைத்தொழிலும் நடக்காது., ஆதலால் நான்கு வகை ஆசாரிகளும் ஒரு இடத்திற் கூடினால் கொல்லனுக்கே முதல் மரியாதை நடக்கும். முக்கியமாய் விவசாயத்துக்கு வேண்டிய கலப்பை, மண்வெட்டி, அரிவாள் கடப்பாரை என்பவற்றைச் செய்பவன் யார்? வீடுகளுக்கு அவசியமான ஆணி, கீல், பூட்டு, கரண்டி, இருப்புச்சட்டி முதலிய பல சாமான்களைச் செய்பவன் யார்? தச்சனும், கன்னானும், தட்டானும் வைத்திருக்கும் ஆயுதங்களைச்செய்தவன்யார்? அவன் தான்கொல்லன். கொல்லன் வேலை செய்யுமிடத்தையும் நீங்கள் பார்த்திருக்கிறீர்களா? அவன் வைத்திருக்கும் ஆயுதங்களையும் அவன் அவற்றை உபயோகிக்கும் விததத்தையும் பாருங்கள்.

தச்சன் மரவேலை செய்பவன். உங்கள் பள்ளிக்கூட வகுப்பிலுள்ள நாற்காலிகளையும் மேசை, பெஞ்சு, கதவு, ஜன்னல், கலப்பை முதலிய சாமான்களையும் செய்பவன் யார்? அவன தான் தச்சன். தச்சன் தன் பட்டறையில் உபயோகிக்கும் ஆயுதங்கள் எவையென்றும் அவற்றால் அவன் என்ன செய்கிறான் என்றும் சொல்லுவீர்களா?



தச்சன்.

கன்னான் பித்தளை, தாமிரம், வெண்கலம் ஈயம் என்னும் உலோகங்களால் பாத்திரங்கள் செய்பவன்.



கன்னான்.



தட்டான்.

தட்டான் தங்கம் வெள்ளி முதலியவற்றால் நகைகள் செய்பவன். அவன் நுட்பமான பல ஆயுதங்கள் வைத்

திருப்பான். உங்களிற் சிலர் அணிந்திருக்கும் கடுக்கனும், தட்டும், காப்பும், மோதிரமும் செய்தவன் தட்டானே. இன்னும் பெண்கள் அணியும் அநேகவிதமான ஆபரணங்களையும் அவனே செய்கிறான்.

நெசவுத்தொழிலாளர்—நாம் எல்லோரும் வேஷ்டிகள் உடுத்துகிறோம். நம்மில் சிலர் சொக்காய் போடுகிறோம். இவற்றை நெய்கிறவர்கள் சேணியர், சாலியர், கோளர், ஈழுவர், வள்ளுவர் என்கிற பல ஜாதியார்கள். அவர்கள் துணிகளை எப்படி நெய்கிறார்கள்? முதலில் பருத்தியை நூலாக நூற்றுப் பின் நெசவு இயந்திரத்தில் துணிகளாக நெய்கிறார்கள். பருத்தியின் நிறம் என்ன? வெள்ளை நிறம். ஆனால் கறுப்பு, சிவப்பு, மஞ்சள், பச்சை முதலிய துணிகளையும் சிலர் உடுத்துவதை நீங்கள் பார்க்கிறீர்கள் அல்லவா? அந்தத் துணிகள் பல நிறங்களில் எப்படிச் செய்யப்படுகின்றன தெரியுமா? முதலில் நூலுக்குக் கறுப்பு, சிவப்பு மஞ்சள், பச்சை நிறமான பலவிதச் சாயங்களை ஏற்ற வேண்டும். பின்பு தேவையான நிறமுள்ள நூல்களால் துணிகளை நெய்யவேண்டும். இப்படி நெய்யும் தொழிலுக்கு நெசவுத் தொழில் என்று பெயர். வஸ்திரங்கள் நமக்கு முக்கியமல்லவா? ஆதலால் இப்போது சில பள்ளிக்கூடங்களில் நெசவுத் தொழிலும் மாணவர்களுக்குக் கற்பிக்கப்படுகிறது.

வாணியன்.

நாம் பலகாரங்கள் சுடுவதற்கும், தேய்த்துக் குளிப்பதற்கும் எண்ணெயை உபயோகிக்கிறோம். அது எப்படிக் கிடைக்கிறதுதெரியுமா? செக்கில் எள்ளையிட்டு ஆட்டி எண்ணெய் எடுக்கப்படுகிறது. அப்படி எண்ணெய் எடுக்கிறவனை வாணியன் என்றும், செக்கான் என்றும் சொல்லுகிறோம்.

நீங்கள் செக்கைப் பார்த்திருக்கிறீர்களா? உங்கள் உபாத்தியாயருடன் சென்று செக்கைப் பாருங்கள். எள்ளைத்தவிர நிலக்கடலை, ஆமணக்கு, தேங்காய் முதலியவற்றிலிருந்தும் எண்ணெய் எடுக்கப்படுகிறது.

குயவன்.

மண்ணால் செய்யப்பட்ட பானை, குடம், முதலிய பாண்டங்களை நீங்கள் பார்த்திருப்பீர்கள். அவற்றைச்செய்கிறவனே குயவன். அவன் எப்படி மண்பாண்டங்களைச் செய்கிறான்? களிமண்ணைக் கொண்டுவந்து அதிலுள்ள கல் புல் முதலியவைகளை எடுத்துவிட்டுப் பிறகு அம்மண்ணைக் காலால் மிதித்துக் கையாற் பிசைந்து பக்குவப்படுத்துகிறான். பிறகு சக்கரத்தில் வைத்து வேண்டிய பாண்டத்தைச் செய்து சூளையில் வைத்துச் சுட்டு எடுக்கிறான்

குயவன் பாண்டங்கள் செய்யும் இடத்திற்கு நீங்கள் போய்ப் பாருங்கள்.

இடையன்.

இடையர் ஆடுமாடுகளை மேய்த்துப் பரிபாலிப்பவர்கள். தாங்களே மாடுகள் வைத்தும், ஆடுமாடுகளை மேய்த்தும் ஜீவிப்பார்கள். அவர்கள் பாலைக்கறந்து விற்பனைசெய்கிறார்கள். மீதிப் பாலைத் தயிர், மோராகச் செய்கிறார்கள். தயிரைக் கடைந்து வெண்ணெயும், வெண்ணெயைக் காய்ச்சி நெய்யுமாகச்செய்து விற்கிறார்கள்.

வண்ணான்.

துணிகள் அழுக்காய்விட்டால் நீங்கள் என்ன செய்கிறீர்கள்? உங்களால் வெளுப்பாக்க முடியாத துணிகளை வெளுத்துக் கொடுக்கிறவன் யார்.? அவனே வண்ணான். வண்ணான் உதவியும் நமக்கு அவசியமல்லவா?

முன்னே கூறிய இவர்களைத்தவிர இன்னும் அநேக தொழிலாளிகள் இருக்கிறார்கள். செம்படவர் மீன்பிடித்து விற்பவர். நீங்கள் உபயோகிக்கும் செருப்பு, பூட்ஸ் செய்பவர் சக்கிலியர்கள், அல்லது செம்மான்கள். இவர்கள் இன்னும் அநேக சாமான்களைச்செய்வார்கள். குதிரைச் சேணம், வடக்கயிறு முதலியவற்றை இவர்கள் தோலால் செய்கிறார்கள். முற்கூறிய எல்லாத் தொழிலாளிகளும் தாங்கள் செய்த சாமான்களை எங்கே விற்கிறார்கள்?

வர்த்தகம் (வியாபாரம்.)

நீங்கள் உங்கள் புஸ்தகம், கற்பலகை, பென்சில், காகிதம் எங்கே வாங்குகிறீர்கள்? அந்தக் கடைகளைத தவிர வேறு என்ன கடைகளைப் பார்த்திருக்கிறீர்கள்? உங்கள் ஊரில்

விளையும்பொருள்களையும் வேறு பொருள்களையும் கடைகளில் வாங்கலா மல்லவா? உங்கள் ஊரில் சந்தை கூடுகிறதா? உங்கள் ஊரில் விளையும் பொருள்களில் உபயோகப்பட்டவைபோக மீதமான பொருள்களை வெளியிடங்களில் விற்பார்கள். வெளியிடங்களில் மீந்த பொருள்களைக் கொடுத்து நமக்குஉபயோகமான பொருள்களை வாங்கி உங்கள் ஊர்களில் விற்கிறார்கள். இப்படி ஒரு பொருளைக் கொடுத்துமற்றொரு பொருளை வாங்கும்தொழிலுக்கு வியாபாரம் என்று பெயர். நமது ஊரிலிருந்து வெளியில் அனுப்பப்படும்பொருள்களுக்கு ஏற்றுமதி என்றும், வெளியிடங்களிலிருந்து வந்து ஊரில்இறங்கும் பொருள்களுக்கு இறக்குமதி என்றும் பெயர். வியாபாரம் நடக்கும் இடங்கள் கடைகளும் சந்தைகளுமே.

போக்குவரவுச் சாதனங்கள்.

உங்கள் ஊருக்கு வெளியிடங்களிலிருந்து மாட்டு வண்டிகளின் மூலமாய்ப் பல பொருள்கள் கொண்டுவரப் படுகின்றன. பல வண்டிகள் தங்கியிருக்கும் இடத்துக்கு வண்டிப்பேட்டை என்று பெயர். உங்கள ஊர் ஒருபெரிய நதியின் கரையிலிருந்தால், அடுத்த கரையிலிருந்து படகுகளிலும் தோணிகளிலும் சாமான்கள் கொண்டு வரப்படும் புகைவண்டிகள் ஓடுமிடங்களில், அவற்றிலேயே வேண்டிய இடங்களுக்குச் சாமான்கள் அனுப்பப்படுகின்றன.

வண்டிகள்,படகுகள்,புகைவண்டிகள் என்பனவற்றில் ஓர் ஊரிலிருந்து மற்றொருஊருக்குச் சாமான்கள்கொண்டு போகிறார்கள் என்று அறிந்தோம். வண்டிகள் செல்வதற்கு ரஸ்தாக்கள் போடப்பட்டிருக்கின்றன. ரஸ்தாக்களின் இரு பக்கங்களிலும் மரங்கள் வைக்கப்பட்டுள்ளன.

ரஸ்தாக்கள் மேடு பள்ளமின்றி யிருப்பதற்குச் சரளைக்கற்கள் போட்டு ஒழுங்கு செய்யப்பட்டிருக்கின்றன. ரஸ்தாக்கள் செல்லும் பாதையில் நதிகள் குறுக்கிடுமல்லவா? அவ்விடங்களில் பாலங்கள் கட்டப்பட்டிருக்கின்றன. அப்பாலங்களின் மேல் வண்டிகள் செல்லும்.



புகைவண்டிகள் உங்கள் ஊருக்குச் சமீபத்தில் செல்லுகிறதா? நீங்கள் அவ்வண்டியை அவசியம் பார்க்க வேண்டும். அதன் படம் இதோ இருக்கிறது பாருங்கள். பல வண்டிகளால் இணைக்கப்பெற்ற தொடரை என்ஜின் என்ற சூத்திரவண்டி நீராவியின் உதவியால் இழுத்துக்கொண்டு மேடு பள்ளமில்லாத பாதைமேற் போடப்பட்ட, இரண்டு சமசதுரமான தண்டவாளங்களின்மேல் ஓடுகிறது. துரைத்தனத்தாரால் நமக்குண்டான உபகாரங்களில் இது

வும் ஒன்று. இதில் அதி சீக்கிரத்திலும் சொற்பச் செலவி லும் நினைத்த இடம் போகலாம். அவ்வண்டிகளின் மூலம் பலபல சரக்குகள் ஏற்றுமதியும் இறக்குமதியும் ஆகின்றன. மெயில் வண்டிகளில் தபாற்கடிதங்களும் கொண்டுபோகப் படுகின்றன. இருப்புப் பாதையின் ஒரு பக்கத்தில் தூண்க ளும், அவற்றின்மேல் கம்பிகளும் வழி நெடுகப் போடப் பட்டிருப்பதை நீங்கள் பார்த்திருப்பீர்கள். அவற்றின் மூலமாகவே தந்திசமாசாரங்கள் ஓர் ஊரிலிருந்து மற்றோர் ஊருக்குத் தெரிவிக்கப்படுகின்றன.

ஜனங்கள், ஜாதி, மதம், பாஷை முதலியன.

கடவுளால் உலகத்தில் உண்டாக்கப்பட்ட ஜீவராசி கள் கணக்கில் அடங்காதவை. இந்த எல்லா ஜீவராசிகளி லும் மனிதரே உயர்ந்தவர்கள். அவர்களுக்கு இது நல் லது, இது கெட்டது என்று அறியும் பகுத்தறிவு உண்டு. மிருகங்கள் தங்களுக்கு வேண்டிய உணவு இயற்கையிலே யே சுலபமாய் அகப்படும் இடங்களை நாடிச்சென்று வாசம் செய்யும். மனிதர்களோ இயற்கையாகக் கிடைக்கும் பொ ருள்களையும் கால நேரங்களையும் உத்தேசித்து வேண்டிய படி வேலை செய்து உணவைப் பெற்று ஜீவிக்கிறார்கள். நமது தேசம் அதிக மலைப்பிரதேசமாயும், வனாந்தரமாயும் இராமல், நிலவளம் நீர்வளம் பொருந்திய பூமியாயிருக்கி றது. இந்தத் தேசத்தில் உழுது பயிரிட்டு ஜீவிப்பவர்களே பலர். ஆதலால் விவசாயத்துக்கு ஏற்ற நீர்வளமுள்ள இடங் களில் வீடுகளைக் கட்டிக்கொண்டு ஜனங்கள் வசிக்கிறார்கள். நதிக்கரைகளிலேயே பலபட்டணங்களும் கிராமங்களும்ஏற் படுகின்றன. கிராமவாசிகளே நமதுதேசத்தில் அதிகமான பேர்கள். ஆங்காங்கு வியாபாரமும் கைத்தொழிலும், கல் வியும் மிகுந்த இடங்களில் பட்டணங்கள் ஏற்படுகின்றன.

ஒவ்வொரு நாகரிக ராஜாங்கமும் அந்த இராஜாங்கத்திற்குட்பட்ட ஜனங்களின் தொகை, ஜீவனம் முதலிய விஷயங்களைச் சில சமயங்களில் கணக்கிட்டுத் தேசத்தின் விருத்தாந்தங்களை எல்லாருக்கும் தெரியும்படி வெளிப்படுத்துவார்கள். அப்படியே நமது தேசத்திலும் 10 வருஷங்களுக்கு ஒரு முறை இந்தக் கணக்குத் துரைத்தனத்தாரால் எடுக்கப்படுகிறது. இதற்கு சென்ஸஸ் (Census) அல்லது ஜனசங்கியை என்று பெயர்.

ஜனங்கள் எல்லாரும் கடவுளை அறிய முடிவதில்லை. உங்கள் வகுப்புப் பிள்ளைகள் எல்லாரும் ஒரே கடவுளை வழிபடுகிறீர்களா? இல்லை. உங்கள் வகுப்பில் இந்துக்களும், முகம்மதியர்களும், கிறிஸ்தவர்களும் படிப்பீர்கள். புராதனமான பழைய வேதங்களை ஒப்புக்கொண்டு அதன்படி கடவுளை வழிபடுகிறவர்கள் இந்துக்கள். இந்துக்களிற் சிலர் விஷ்ணுவையும், சிலர் சிவனையும் வழிபடுகிறார்கள். விஷ்ணுவை வழிபடுவோர் வைஷ்ணவர்கள். சிவனைத் தொழுகிறவர்கள் சைவர்கள். முகம்மது என்ற பெரியவர் அரேபியா தேசத்தில் ஆதியில் போதித்துவந்த மதம் முகம்மதிய மதம். அதை அனுசரிப்பவர் முகம்மதியர். அவர்களும் நமது நாட்டில் இருக்கிறார்கள். இயேசு கிறிஸ்து என்ற பெரியார் ஏற்படுத்திய மதம் கிறிஸ்துவ மதம். அதை அனுசரிப்பவர்கள் கிறிஸ்தவர்கள். இந்த 3 மதங்களையும் அனுசரிப்பவர்களே, நமது ஜில்லாவில் அதிகமாயிருக்கிறார்கள்.

ஜாதி:—இந்துக்களில் பல ஜாதியார்கள் இருக்கிறார்கள். அவர்களில், பிராமணர், வேளாளர், முதலியார்கள், பிள்ளைகள், நாயக்கர்கள், கள்ளர், மறவர், அகம்படியார்,

படையாச்சி சில ஜாதியார்கள். வேறு சில ஜாதியார்களை யும் அவர்களுடைய தொழில்களையும்பற்றி முன்னரே படித்திருக்கிறீர்கள். ஒருமதத்தைச் சேர்ந்த எல்லா ஜாதி யாரும் ஒரே பாஷையைப் பேசுவதில்லை. இந்துக்களில் சிலர் தமிழையும், சிலர் தெலுங்கையும், சிலர் கன்னடத் தையும் நமது ராஜதானியில் பேசுகிறார்கள். முகம்மதியர் இந்துஸ்தானி பாஷையும், தமிழும் பேசுகிறார்கள். இரா ஜாங்க பாஷையாகிய இங்கிலீஷ்பாஷையைச் சிலரே பேசு கிறார்கள். அதனைப் பேசுகிறவர்கள் ஏறக்குறைய நூற்றுக் குப் பத்துப்பேர்தான் இருக்கலாம்.

துரைத்தனம்.

உங்கள் வீட்டுக்கு வேண்டிய சாமான்களைத் தேடிக் கொடுப்பவர் யார்? உங்கள் வீட்டில் பிள்ளைகள் சண்டை யிட்டால் தீர்த்துவைப்பவர் யார்? உங்கள் தகப்பனார். அவரே உங்கள் வீட்டுத் தலைவர். அவ்வாறே உங்கள் ஊருக்குத் தலைவர் ஒருவர் இருக்கிறார். அவர்தான் கிராம முனிசீபு. அவருக்கு உதவியாக ஏற்பட்ட வேலையைச் செய்யத் தலையாரி, வெட்டியான் முதலிய கிராம சிப்பந்தி கள் இருக்கிறார்கள். பல கிராமங்கள் சேர்ந்து ஒரு தாலூ காவும், பல தாலூகாக்கள் ஒரு ஜில்லாவும், பல ஜில்லாக் கள் கூடி ஒரு ராஜதானியும் ஆகின்றன. இதை முன்னரே படித்திருக்கிறீர்கள். இவைகள் எல்லாவற்றிற்கும் படிப் படியாய்ப் பெரிய உத்தியோகஸ்தர்கள் ஏற்பட்டிருக்கிறார் கள். நமது இந்தியா தேசத்தை நியாயம் பிசகாது பரிபா லிப்பவர் மாட்சிமை தங்கிய ஐந்தாம் ஜார்ஜ் சக்கரவர்த்தி அவர்கள். அவருடைய திருவுருவப்படம் இந்தப் புஸ்தகத் தின் முன் பக்கத்தில் இருக்கிறது. அதைப் பாருங்கள்.

நிலப் பிரிவுகள்.

நீங்கள் மழை பெய்து ஓய்ந்த பிறகு, வெளியே சென்று பார்த்தால் அநேக இடங்களில் சிறிதளவு நீர் ஓடுவதையும், பல நீர் ஓடைகள் ஒரு இடத்தில் சேருவதையும் பார்க்கலாம். சேர்ந்த நீர் ஒன்ருகத் திரண்டு வேறு இடத்திற்கும் ஓடலாம். இடையிடையே திட்டுகளைப் போன்று சில மண்மேடுகள் காணப்படும்.

அதுபோல நீங்கள் உங்கள் ஊரிலுள்ள கண்மாய்க் கரைமீதில் நின்று நான்கு பக்கங்களையும் சுற்றிப் பார்த்தால் நிலப்பாகமும் நீர்ப்பாகமும்இடையிடையே பிரிந்துகாணப் படும். பூபாகத்தில், சாகுபடி செய்வதையும் மாடு ஆடுகள் மேய்வதையும் நீங்கள் பார்க்கலாம். வயல்களில் நீரைக் கட்டி அது தேங்கி இருப்பதையும் நீங்கள் பார்க்கலாம்.

உயரமான கோபுரம் அல்லது மலையின்மேல் ஏறி நீங்கள் சுற்றிலும் பார்த்தீர்களானல் பல கிராமங்கள், கண்மாய்கள், சாகுபடிநிலங்கள், வீடுகள் முதலியவற்றைக் காண்பீர்கள்.

இவ்வாறு ஒரு ஜில்லா அல்லது தேசம் முதலிய பெரிய பூபாகத்தின் அமைப்பைக் காட்டுவதற்குத் தயாரிக்கப்பட்டிருக்கிற இந்தப்படத்திலிருந்து தேசத்திலுள்ள பெரிய நீர்ப்பிரிவுகளையும், நிலப்பிரிவுகளையும் நாம் தெரிந்துகொள்ளலாம்.

இப்படி அநேக தேசங்கள் சேர்ந்து ஒரு கண்டம் ஆகிறது. இந்தக் கண்டத்தில், நாம் முன் உயரமான இடத்திலிருந்து பார்த்தபோது சிறிது சிறிதாகக் காணப்பட்ட நீர் நிலப் பிரிவுகளைப்போல் எவ்வளவோ மடங்கு விஸ்தீரணமுள்ள பூபாகங்களைப் பார்க்கலாம்.

கீழேகாட்டிய படத்தில் இந்த நிலப்பாகங்கள் நீர்ப் பாகங்கள் விளக்கப்பட்டிருக்கின்றன.

தீவு—எல்லாப் பாகங்களிலும் தண்ணீரால் சூழப்பட்டிருக்கும் நிலப்பாகத்திற்குத் தீவு என்று பெயர். (உ-ம்) ராமேசுவரம்.



தீபகற்பம்—அநேகமாக மூன்று பக்கமும் தண்ணீரால் சூழப்பட்ட நிலப்பாகத்துக்குத் தீபகற்பம் என்று பெயர். (உ-ம்) நாம் வசிக்கும் இந்தியா.

பூசந்தி—இரண்டு பெரிய நிலப்பாகங்களைச் சேர்த்து இரண்டு பெரும் ஜலபாகங்களைப் பிரிக்கும் குறுகிய நிலப் பாகத்துக்குப் பூசந்தி என்று பெயர். (உ-ம்) ஐரோப்பாவி லுள்ள கோரிந்து பூசந்தி.

முனை—சமுத்திரக்கரையின் ஒரு பாகமானது சில இடத்தில் சமுத்திரத்திற்குள் ஒடுங்கிக் கூர்மையாய் நீண்டி ருக்கும். அப்படிப்பட்ட பூபாகத்துக்கு முனை என்று பெயர். (உ-ம்) நமது தேசத்தின் தென்கோடியிலுள்ள கன்னியாகுமரி முனை.

மலை—நீங்கள் மலையைப் பார்த்திருக்கிறீர்கள். அது பூமி மட்டத்திற்கு மேல், மிகவும் உயர்வாய்க் காணப் படுகிறது. இப்படி உயர்ந்து இருக்கும் பாகத்திற்கு மலை என்று பெயர். (உ-ம்) பேய்மலை.

மலைத்தொடர்ச்சி—பல மலைகள் ஒன்றோடொன்று அடுத்து அடுத்துச் சேர்ந்திருப்பதற்கு மலைத்தொடர்ச்சி என்று பெயர். (உ-ம்) மேற்குத்தொடர்ச்சிமலை.

குன்று—மலையிலும் சற்றுச் சிறிதாய் மரம், செடிகள் அதிகமாய் முளைத்திராத சிறிய மலைக்குக் குன்று என்று பெயர். (உ-ம்) திருவண்ணாமலைக்குன்று.

பள்ளத்தாக்கு—இரண்டு மலைகளுக்கும் ஊடேயுள்ள தாழ்ந்த பூமிக்குப் பள்ளத்தாக்கு என்று பெயர். (உ-ம்) கம்பம் பள்ளத்தாக்கு.

காடு—அநேக செடிகொடிகள் அடர்ந்திருக்கும் விசா லமான தரைப்பாகத்துக்குக் காடு என்று பெயர். (உ-ம்) நமது ஜில்லாவிலுள்ள சிவகங்கைக் காடு.

நீர்ப் பிரிவுகள்.

மகாசமுத்திரம்—உங்களுடைய ஊரில் பெரும் பள்ளங்களில் நீர் தேங்கியிருப்பதைப் பார்த்திருக்கிறீர்கள். அவற்றிலும் பெரிதான கண்மாய், ஏரி முதலியவற்றையும் நீங்கள் பார்த்திருக்கிறீர்கள். அவற்றிலும் எவ்வளவோ மடங்கு பெரிதாய்க் கண்ணுக்கு எட்டாத அளவு பரவியும் உப்பு நீருடையதாயும் உள்ள ஜலபாகத்துக்கு மகா சமுத்திரம் என்று பெயர். அநேகமாய்ப் பெரிய நதிகள் எல்லாம் சமுத்திரங்களிலேயே போய் விழுகின்றன. (உ-ம்) இந்துமகாசமுத்திரம்.

வளைகுடா—சமுத்திரக்கரை, சில இடங்களில் அதிக அலையால் உடைந்தும், சில இடங்களில் உடையாமலுமிருக்கும். உடைந்த இடங்களில் பூமிக்குள் குறுகிச் செல்லும் சமுத்திரத்தின் பாகத்துக்கு வளைகுடா என்று பெயர். (உ-ம்) பாரஸீக வளைகுடா.

விரிகுடா—விரிந்த வாயுடன் பூமிக்குள் செல்லும் ஜல பாகத்துக்கு விரிகுடா என்று பெயர். (உ-ம்) நமது தேசத்திற்குக் கிழக்கிலுள்ள வங்காளவிரிகுடா.

கடல்—இது சமுத்திரத்தைப் பார்க்கிலும் சற்றுச் சிறிதான உப்புநீர்ப்பாகம். (உ-ம்) நம்முடைய தேசத்திற்கு மேற்கிலுள்ள அராபிக்கடல்.

ஜலசந்தி—தண்ணீர் நிரம்பிய இரண்டு வயல்களுக்கு ஊடேயுள்ள வரப்பை வெட்டிவிட்டால் என்ன ஆகும்? அவ் விரண்டு வயல்களிலுமுள்ள தண்ணீரும் குறுகிய நீர்ப்பாகத்தால் சேர்க்கப்படும். அதுபோல், இரண்டு பெரிய ஜலபாகங்களைச் சேர்த்து, இரண்டு பூபாகங்களைப் பிரிக்கும் ஜல பாகத்திற்கு ஜலசந்தி என்று பெயர். (உ-ம்) இந்தியாவிற்கும் இலங்கைக்கும் மத்தியிலிருக்கும் பாக்ஸ் ஜலசந்தி.

ஏரி—நான்கு பக்கங்களிலும் தரைசூழ்ந்த ஜலபாகத்திற்கு ஏரி என்று பெயர். (உ-ம்) ராஜசிங்கமங்கலம் ஏரி.

நதி—மழை பெய்தவுடன் தண்ணீர் ஒன்றாய்ச்சேர்ந்து பள்ளமான இடத்தை நோக்கிச் செல்வதைப் பார்த்திருப்பீர்கள். அதுபோல் உயர்ந்த மலைகளில் உற்பத்தியாகிப் பள்ளத்தை நோக்கிச் செல்லும் நீர்ப்பாகத்திற்கு நதி என்று பெயர். (உ-ம்) நமது ஜில்லாவில் ஓடும் வைகைநதி.

உபநதி—ஒரு பெரிய நதியில் வந்து கலக்கும் சிறு நதிக்கு உபநதி என்று பெயர். (உ-ம்) வேப்பிலைப்பட்டி ஆறு.

கிளைநதி—ஒரு நதியிலிருந்து பிரிந்து செல்லும் ஆற்றுக்குக் கிளைநதி என்று பெயர் (உ-ம்) காவேரியின் பிரிவாகிய கொள்ளிடம்.

ஜில்லா.

நம்முடைய இந்தியாதேசத்தைப் பல ராஜதானிகளாகப் பிரித்திருக்கிறார்கள். அவைகளில் சென்னை ராஜதானியும் ஒன்று. சென்னை ராஜதானி 25 பாகங்களாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு பிரிவிற்கும் ஜில்லா என்று பெயர். சென்னை ராஜதானியின் 25 ஜில்லாக்கள்:—

1	கஞ்சம்	14	தென்கன்னடம்
2	விசாகபட்டணம்	15	கடப்பை
3	கோதாவரி	16	கர்நூல்
4	கிருஷ்ணா	17	பல்லாரி
5	குண்டூர்	18	அனந்தபுரம்
6	நெல்லூர்	19	சித்தூர்
7	மதராஸ்	20	வடஆற்காடு
8	செங்கற்பட்டு	21	சேலம்
9	தென்ஆற்காடு	22	கோயம்புத்தூர்
10	தஞ்சாவூர்	23	திருச்சிராப்பள்ளி
11	இராமநாதபுரம்	24	மதுரை
12	திருநெல்வேலி	25	நீலகிரி
13	மலையாளம்		



இராமநாதபுரம் ஜில்லா
ஸ்கேல் 1 அங் = 20 மைல்
ஜில்லா எல்லை
ஜமீன் எல்லை
தாலூகா எல்லை
மலைகள்
ஆறுகள்
இருப்புப்பாதை
ரோடு
பட்டணம்
திருச்சி
புதுக்கோட்டை
தஞ்சாவூர்
தஞ்சாவூர்
புதுக்கோட்டை
திருப்புத்தூர்
தேவகோட்டை
சிவகங்கை
மானாமதுரை
பரமக்குடி
இராமநாதபுரம்
முதுகுளத்தூர்
சாத்தூர்
ஸ்ரீவில்லிபுத்தூர்
சிவகாசி
விருதுநகர்
அருப்புக்கோட்டை
கமுதி
தொண்டி
திருவாடானை
தேவிபட்டணம்
உத்தரகோசமங்கை
கீழக்கரை
பாம்பன்
இராமேசுவரம்
கோடி
K.S. NAIDU
C.V.J.
MADURA

இராமநாதபுரம் ஜில்லா.

நாம் வசிக்கும் இந்த ஜில்லாவுக்கு இராமநாதபுரம் ஜில்லா என்று பெயர். நமது சொந்த நாட்டைப் பற்றி அறிய நமக்குப் பிரியம் அதிகம் அல்லவா?

நமது ஜில்லா 1910-ம் வருஷம்தான் புதிதாய் ஏற்படுத்தப்பட்டது. இதற்கு முன் இந்த ஜில்லாவின் பெரும் பாகங்களாகிய இராமநாதபுரம், சிவகங்கை ஜமீன்கள் மதுரை ஜில்லாவோடும், மற்றப்பாகங்கள் திருநெல்வேலி ஜில்லாவோடும் சேர்ந்திருந்தன. இப்போது முன் சொன்ன பழைய மதுரை ஜில்லாவின் பாகங்களாகிய இராமநாதபுரம், சிவகங்கை என்னும் இரண்டு ஜமீன்களையும், திருநெல்வேலி ஜில்லாவின் பாகங்களாகிய சாத்தூர், ஸ்ரீவில்லிபுத்தூர் என்னும் 2 தாலூகாக்களையும் சேர்த்து, நமது இராஜாங்கத்தார், இராமநாதபுரம் ஜில்லாவை ஏற்படுத்தி இருக்கிறார்கள். நமது ஜில்லாவின் கலெக்டர் ஆபீசும், ஜில்லா ஜட்ஜு கச்சேரியும் மதுரை நகரில் உள்ளன.

எல்லைகள்.

உங்கள் பள்ளிக்கூடத்தைச்சுற்றி நான்கு பக்கங்களிலும் எவை இருக்கின்றனவென்று நீங்கள் கவனித்தால், ரஸ்தாக்களும், வீதிகளும், வீடுகள் முதலியனவு மிருக்கக் காண்பீர்கள். அதே மாதிரியாக உங்கள் ஊரைச்சுற்றி வடக்கு, கிழக்கு, தெற்கு, மேற்கு ஆகிய நான்கு திக்குகளிலும் சில கிராமங்கள், பட்டணங்கள், வயல், நதி குன்று முதலியன இருக்கலாம். அப்படிச் சுற்றி இருப்பனவே அவ் ஊரின் எல்லைகளாம்.

உங்கள் பள்ளிக்கூடம் அல்லது உங்கள் ஊரின் எல்லை களைப் பார்த்துத் தெரிந்துகொள்வது மிகவும் சுலபம். ஏனெனில் நீங்களே நேரில் பள்ளிக்கூடம் அல்லது ஊரின் எல்லைகளைச் சுற்றிப்பார்த்துக் கண்டு பிடித்து விடலாம். உங்கள் ஜில்லா முழுவதையும் நீங்கள் சுற்றிப்பார்க்க முடியாததால் அதன் எல்லைகளை நீங்கள் எவ்வாறு அறிவீர் கள்? அதற்கு ஒரு யுக்தி இருக்கிறது. அதாவது உங்கள் ஜில்லாவின் எல்லையைத் தெரிந்துகொள்வதக்கு உங்கள் ஜில்லாப் படத்தைப் பார்த்துத் தெரிந்து கொள்ளலாம்.

நமது ஜில்லாவின் படத்தைப் பாருங்கள். வடக்கே தஞ்சாவூர் ஜில்லாவும், புதுக்கோட்டை ராஜ்பமும் கிழக்கே வங்காளக் குடாக் கடலும், தெற்கே மன்னார்குடாக் கடலும், திருநெல்வேலி ஜில்லாவும், மேற்கே மேற்கு மலைத்தொடர்ச்சியும், மதுரை ஜில்லாவும் எல்லைகளாகவே இருக்கின்றன.

ஜில்லாப்படத்தால் அறியக்கூடிய வேறு விஷயமும் உண்டு. இங்குக் காட்டிய பெரிய படத்தின் தலைப்பில் ஸ்கேல் 1 அங்குலம் = 20 மைல் என்று கண்டிருக்கிற தல்லவா? அதன் பொருள் என்ன? அதாவது அப்படத்தி லுள்ள ஒரு அங்குல தூரம், நமது ஜில்லா நிலத்தில் 20 மைல் தூரத்தைக்காட்டும் என்பதாம். இனி இப் படத்தி லிருந்து ஒரு இடத்துக்கும் மற்றொரு இடத்துக்கும் உள்ள தூரம் எத்தனை அங்குலமோ, அத்தனை 20 மைல் என்று அறிகிறோமல்லவா?

பிரிவுகள்.

ராஜாங்கத்தார் இந்த ஜில்லாவை நான்கு பெரும் பாகங்களாகப் பிரித்திருக்கிறார்கள். அவை சிவகங்கை ஜமீன், இராமநாதபுரம் ஜமீன், சாத்தூர் தாலூகா, ஸ்ரீவில்லிபுத்தூர் தாலூகா என்பனவாம். இவற்றுள் சிவகங்கை ஜமீன் ஆனது சிவகங்கைத் தாலூகா திருப்புத்தூர் தாலூகா என 2 பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. இராமநாதபுரம் ஜமீன் ஆனது இராமநாதபுரம் தாலூகா, பரமக்குடி தாலூகா, முதுகுளத்தூர் தாலூகா, அறுப்புக்கோட்டைத் தாலூகா, திருவாடானைத் தாலூகா என 5 தாலூகாக்களாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. முற்கூறிய ஒவ்வொரு தாலூகாவும் ஒரு டிப்டிதாசில்தாரின் அதிகாரத்துக்குள் இருக்கிறது.

ஜில்லாப்படத்தில் 1 அங்குல நீளமும் 1 அங்குல அகலமும் கொண்ட சமசதுரம் நமது ஜில்லாவின் நிலத்தில் 20 × 20 மைல் = 400 சதுரமைல் ஆகுமல்லவா? இராமநாதபுரம் ஜமீன் 2058 சதுரமைலும், சிவகங்கை ஜமீன் 1733 சதுரமைலும், சாத்தூர் தாலூகா 594 சதுரமைலும், ஸ்ரீவில்லிபுத்தூர் தாலூகா 449 சதுரமைலும் பரப்பு அளவு உள்ளன. இப்பிரிவுகளில் பரப்பில் எது பெரிது; எது சிறிது? என்று சொல்லுங்கள்.

இயற்கை அமைப்பு.

ஆளுகைக்குச் சௌகரியமாக நமது ராஜாங்கத்தார் இந்த ஜில்லாவை முன் சொன்னபடி பிரித்திருக்கிறார்கள். பொதுவாகச் சொன்னால் நமது ஜில்லா மேற்பாகத்தில் பூமி சமுத்திரமட்டத்துக்கு 3000 அடிக்கு மேல் உயர்ந்

தும், அங்கிருந்து தென்கிழக்கு நோக்கித் தாழ்ந்தும் இருக்கிறது. எனவே இந்த ஜில்லாவின் மேற்பாகத்தைத் தவிர மற்றப்பாகம் சமவெளி என்று சொல்லலாம். ஆனால் இயற்கை அமைப்பின்படி இந்த ஜில்லாவை 5 பாகங்களாகப் பிரிக்கலாம். அவைகள்:—

(1) குன்றுகள் அடர்ந்த பாகம்— ஸ்ரீவில்லிபுத்தூர் தாலூகாவின் மேற்குப்பாகம். நமது ஜில்லாவில் இத்தாலூகாவிலுள்ள மலைகளைத்தவிர வேறு மலைகள் கிடையா.

(2) கரிசல் நிலம்— ஸ்ரீவில்லிபுத்தூர் தாலூகாவின் பாதிப்பாகமும், சாத்தூர், அருப்புக்கோட்டைத் தாலூகாக்களின் பெரும் பாகங்களும்.

(3) நீர்வளமுள்ள பாகம்—ஸ்ரீவில்லிபுத்தூர்த் தாலூகாவின் ஒரு பாகமும், வைகை நதியும், அதன் கால்களும் பாயுமிடங்களும்.

(4 செவ்வல் நிலம்— சிவகங்கை, இராமநாதபுரம் ஜமீன்களின் பெரும் பாகங்கள்.

(5) மணற் பாங்கான பாகம்—இந்தப் பாகம் இந்த ஜில்லா முழுவதிலும் கலந்திருக்கிறது. ஆயினும் கடல் ஓரங்களில் அதிமாய் இருக்கிறது.

இந்நிலங்களில் இயல்புக்குத் தக்கபடி விளை பொருள்களும் உண்டாகும். இவ்விஷயத்தை விளைபொருள்கள் என்ற தலைப்பின கீழே பாருங்கள.

மலைகள்.

இந்த ஜில்லாவில் மலைகள் மிகச் சொற்பம். ஆனால் ஆங்காங்கே சில குன்றுகள் காணப்படுகின்றன.

மேற்குமலைத் தொடர்ச்சி—இம்மலைத் தொடரானது திருநெல்வேலி ஜில்லாவின் தென்கோடியாகிய கன்னியா குமரி முனையிலிருந்து, வடக்கே வெகுதூரம்வரை மேற்குக் கரை ஓரமாய்ப் பரவி இருக்கிறது. ஆகையால்தான் இப் பெயர் இதற்கு வந்தது. இது இந்த ஜில்லாவின் மேற்கு ஓரத்தில் இருக்கிறது. இந்த ஜில்லாவிலுள்ள மலைகளின் பெயர் பேய்மலை, கற்குளி மலை ஆம். இவை ஸ்ரீவில்லிபுத் தூருக்கு மேற்கே இருக்கின்றன.

கணவாய்மலை—ஸ்ரீவில்லிபுத்தூரில் இருந்து வத்திரா யிருப்புக்குப் போகும் ஒரு கணவாய் இதன் நடுவே இருப்ப தால், இதற்குக் கணவாய்மலை என்ற பெயர் வந்தது. இதில் பெரிய மரங்கள் வளராவிட்டாலும், விறகுக்கு உப யோகப்படக்கூடியன வளருகின்றன.

கல்லுக்குமி—இது கணவாய் மலைக்குக் கிழக்கேயுள்ள ஒரு குன்று. இதில் மரஞ்செடிகள் இல்லை.

திருவண்ணமலை—இக் குன்றானது ஸ்ரீவில்லிபுத்தூ ருக்கு வடக்கே இருக்கிறது. இதில் ஒரு சிறந்த விஷ்ணு கோவில் உண்டு.

நதிகள்.

வைகை—இதுதான் இந்த ஜில்லாவில் பெரியநதி. இது மதுரை ஜில்லாவின் மேற்கிலுள்ள வருஷ நாட்டு மலைகளில் உற்பத்தியாகி, அந்த ஜில்லாவிற் பாய்ந்து; இராமநாதபுரம் ஜில்லாவில் பிரவேசிக்கிறது. இதன் உபநதிகள்—சுருளி, தேனி நதி, வராக நதி, மஞ்சள் நதி என்பவைகளே. வைகையின் நீளம் சுமார் 100-மைல். இதற்கு வேகவதி என்றும் பெயருண்டு. ஏனெனில், மழை காலத்தில் இதில் தண்ணீர் வேகமாய்ச் செல்லும். வைகை என்று இதற்குப் பெயர் வந்ததற்குக் காரணம்:—

மதுரையில், சொக்கருக்கும், மீனாட்சி அம்மனுக்கும் கல்யாணம் நடக்கையில். சொக்கருடன் வந்த குண்டோ தரனது தீராத தாகத்தைத் தீர்க்க இது வரவழைக்கப் பட்டதென்றும், நதி வந்தவுடன், சொக்கர் அவனை அதில் நீர்குடிக்க வைகை (அதாவது கையை வை) என்றதால் அந்தப் பெயர் அதற்கு வந்ததென்றும் புராணங்களில் சொல்லப்பட்டு இருக்கின்றது.

இது நமது இராமநாதபுரம் ஜில்லாவில் சிவகங்கை, பரமக்குடி, இராமநாதபுரம் தாலூகாக்களிற் பாய்ந்து, ஆற்றங்கரை என்ற ஊருக்குச் சமீபத்தில் சமுத்திரத்தில் விழுகிறது.

குண்டாறு— இது மதுரை ஜில்லாவில் மேற்குத் தொடர்ச்சி மலையில், உற்பத்தியாகி இந்த ஜிலலாவில் அருப்புக் கோட்டை, முதுகுளத்தூர் தாலுகாக்களின் வழியாய் ஓடுகிறது. கமுதிக்குச் சமீபத்தில் இந்நதிக்கு மண்ணினாற் கட்டப்பட்ட ஓர் அணை உண்டு. இவ்விடத்தி லிருந்து புறப்படும் ஒரு கால் முதுகுளத்தூர் தாலூகாவின் சில இடங்களிற் பாய்கிறது. இது கீழக்கரை என்னும் கிரா மத்துக்குச் சமீபத்தில் கடலில் விழுகிறது. இதற்குக் கண்டு நதி என்றும பெயர்.

அர்ச்சுன நதி—இது மேற்கிலுள்ள மலையில் உற்பத்தி யாகிப் பல கண்மாய்களின் வழியாய் ஓடி, காளையார் குறிச்சி என்னும் ஊருக்குச் சமீபத்தில் இரண்டு உபநதி களைச் சேர்த்துக்கொண்டு வெகுதூரம் பாய்ந்து, பல கண் மாய்களை நிரப்புகிறது. இதன் உபநதிகள், தாழை ஊற்று, வடுகபட்டி ஆறு என்பன ஆம். இது கடைசியில் வைப் பாற்றில் கலக்கிறது. இதன்மறுபெயர்வேப்பிலைப்பட்டிஆறு.

வைப்பாறு—இது மேற்கிலுள்ள மலைகளில் உற்பத்தியாகி ஸ்ரீவில்லிபுத்தூர், சாத்தூர் தாலூகாக்களின் வழியாய்ப் பாய்ந்து, திருநெல்வேலி ஜில்லாவிற் பிரவேசிக்கிறது. இந்நதியின் மேலுள்ள முக்கியமான பட்டணம் சாத்தூர்.

திருமணிமுத்தாறு—இது மிகவும் சிறிய நதி. கோடையில் இதில் ஜலம் கிடையாது. மதுரை ஜில்லாவிலுள்ள மலைகளில் உற்பத்தியாகிச் சிவகங்கை, இராமநாதபுரம் ஜமீன்களிற் பாய்ந்து கடலிற் சங்கமம் ஆகிறது.

வரிசிலை ஆறு—இது மதுரை ஜில்லாவில் உற்பத்தியாகி, இந்த ஜில்லாவில் சிவகங்கை, இராமநாதபுரம் தாலூகாக்களிற் பாய்ந்து கடலில் விழுகிறது.

இவைகளைத் தவிர பாலாறு வெள்ளாறு என்ற சிறிய நதிகளும் இருக்கின்றன.

ஏரிகள்.

ஏரிகளைச் சாதாரணமாய்க் குளங்கள் அல்லது கண்மாய்கள் என்று வழங்குவர். இவைகள் கால்வரத்துக் கண்மாய்களென்றும் வானமாரிக்கண்மாய்கள் அல்லது குளங்கள் என்றும் இருவகைப்படும். நதிநீராவது, அதன்கால்களின் நீராவது வந்து நிரம்புவது கால்வரத்துக் குளங்கள். அப்படியல்லாமல் மழை ஜலத்தால் நிரம்புவன வானமாரிக் குளங்கள். நமது ஜில்லாவில் மழைத்தண்ணீரை ஆங்காங்குக் குளங்களில் தேக்கி வைப்பார்கள்.

இராஜ சிங்க மங்கலம் ஏரி—இது இந்த ஜில்லாவின் வடக்குப் பாகத்தில் இருக்கிறது இது நமது ஜில்லா ஏரிகளிற் பெரியது. படத்தைப்பார்த்து இது எங்கே இருக்கிறதென்று சொல்லுங்கள்.

வத்திரா யிருப்புப் பெரிய கண்மாய்—இது ஸ்ரீவில்லி புத்தூர் தாலூகாவிலுள்ள குளங்களிற் பெரியது. இதில் நிரம்பிய ஜலம் அநேக ஏக்கர் நிலங்களுக்குப் பாய்ச்சப் படுகிறது. இதின் சுற்றளவு சுமார் 5-மைல்.

கோபால சமுத்திரம்—இது வத்திராயிருப்புப் பெரிய கண்மாய்க்குக் கிழக்கே 4-மைல் தூரத்தில் உள்ள மிகப் பெரிய கண்மாய்.

சீதோஷ்ண ஸ்திதி.

இதன் பொருள்—சீதம் என்றால் குளிர்ச்சி, உஷ்ண மென்றால் சூடு; ஸ்திதி என்றால் நிலைமை. எனவே சீதோஷ்ண ஸ்திதி என்பதற்கு ஒரிடத்தின் குளிர்ச்சியும், வெப்பமும் ஆகிய இவைகளின் நிலைமை என்று அர்த்தம். இந்த ஜில்லாவில் டிசம்பர், ஜனவரி மாதங்கள் தவிர, மற்றெல்லாக்காலங்களிலும் உஷ்ணம் மிகவும் அதிகம் ஏப்ரல், மே மாதங்களில்தான் உஷ்ணம் பொறுக்கமுடியாமல் இருக்கும். ஆகஸ்டு, செப்டம்பர், அக்டோபர், நவம்பர் மாதங்களில் சொற்பமாகக் கால மழை பெய்யும். நமது ஜில்லாவில் ஸ்ரீவில்லிபுத்தூர் தாலுகாவில்தான மழை அதிகம். நமது ஜில்லாவில் வருஷத்தில் சராசரி 29 அங்குலம் மழை பெய்கிறது. கடற்கரையோரம் எப்போதும் சமசீதோஷ்ண நிலையிலிருக்கிறது. ஏனெனில் எப்போதும் அங்குக் கடற்காற்று அடிக்கிறது.

விளைபொருள்.

நமது ஜில்லாவில புன்செய்ப் பயிர்களே ஏராளமாக விளைகின்றன. எக்காலமும் தண்ணீர் ஓடும் நதிகள் இல்லாததால், ஜலாதாரம் இந்த ஜில்லாவில் குறைவு. ஆனாலும்

ஸ்ரீவில்லிபுத்தூர், சாத்தூர் தாலூகாக்களில் தண்ணீரைக் குளங்களில் தேக்கி, அதை நன்செய்ச்சாகுபடிக்கு உபயோகிக்கிறார்கள். வைகைநதி பாயுமிடங்களில் அதன் நீரை நன்செய்ச் சாகுபடிக்கு உபயோகிக்கிறார்கள். இந்த ஜில்லாவில் உள்ள ஜனங்கள் மழையில்லாத காலங்களில் மிகக் கஷ்டப்பட்டுக் கிணற்று நீரை இறைத்துப் பாச்சித் தானியங்களை விளைவிக்கிறார்கள்.

தாவரங்கள்.

1. மலைப்பிரதேசம்—தேக்கு, வேங்கை, முதலிய மரங்களும், தேயிலை, கடுகு, காப்பிக்கொட்டை, ஏலக்காய் முதலியனவும் இப்பிரதேசத்தில் உண்டாகின்றன.

2. கரிசல்தரை—இங்கு ஏராளமாகப் பருத்தியும், வரகு, காணம், குதிரைவாலி, சாமை ஆகிய இவைகளும் பயிரிடப்படுகின்றன.

3. நீர் வளமுள்ள பாகம்—இதில் நெல்தான் முக்கியமாய்ப் பயிரிடப்படுகிறது. கரும்பும், எள்ளும், சோளமும் தினையும், வாழையும் கொஞ்சமாய்ப் பயிரிடப்படுகின்றன.

4. செவ்வல் நிலம்—இங்கு நிலக்கடலை, இரும்புச் சோளம், மொச்சைப்பயறு, துவரை, உளுந்து, கம்பு, தட்டைப்பயறு, பாசிப்பயறு, நிலக்கடலை ஆகிய இவைகள் விசேஷமாய் உண்டாகின்றன.

5. மணற் பாங்கான பாகம்—இதில் நீருள்ள பாகங்களில் தென்னையும், நீரில்லாத பாகங்களில் பனையும் வளரும். கடலோரங்களில் கருவேல் மரங்களும், உடைமரங்களும் விசேஷமாய் உண்டாகின்றன.

தோட்டங்களில் வாழை, மிளகாய், கத்தரி முதலிய காய்கறிகள் உண்டாக்கப்படுகின்றன.

உயிர்ப்பிராணிகள்.

சிறுபுலி, ஓநாய், நரி காட்டுப் பசு முதலிய காட்டுப் பிராணிகளும், பசு, எருமை, குதிரை, ஆடு, நாய், பூனை முதலிய வீட்டுப்பிராணிகளும், பருந்து, கழுகு, வல்லூறு, ஆந்தை, கிளி, மைனு, புறு, காடை, கவுதாரி, கொக்கு, காகம், கோழி, வாத்து முதலிய பக்ஷிகளும் மற்ற ஜில்லாக்களிற் போலவே இந்த ஜில்லாவிலும் உண்டு. கடலில் பலஜாதி மீன்களும், முத்துச்சிப்பியும் உண்டு. கடலோரங்களிலுள்ள பெரும் புதர்களில் ஒரு வகை மான்கள் வசிக்கின்றன. கிழக்குத்திக்குக்காளை என்ற சிறந்த காளைமாடுகளும், நாய்களில் ராஜபாளையம் நாய் இனமும் நமது ஜில்லாவில் விசேஷம்.

உலோகங்கள்.

நமது ஜில்லாவில் விசேஷமாக உலோகங்கள் விளைவில்லை. திருப்பத்தூரில் சமீபத்தில் ஒருவகைப் பாறைக்கற்களும், அறுப்புக்கோட்டையில் ஒருவகைச் சிவப்பு நிறமுள்ள கல்லும் உண்டு. கடலோரங்களிற் சில விடங்களில் சுண்ணும்புக் கற்களும், சில இடங்களில் உப்புமண்ணும் அகப்படுகின்றன. இராமேசுவரத் தீவைச்சுற்றிப் பவளக் கொடிகள் உண்டாகின்றன.

கைத்தொழில், ஜீவனமுயற்சி, வியாபாரம்.

விவசாயம் அல்லது பயிரிடுதல் நமது ஜில்லா வாசிகளின் முக்கியமான தொழிலாகும். பல இடங்களில் மட்டமான துணி நெசவு நடைபெறுகிறது. சாத்தூரிலுள்ள பஞ்சாபீசில் பல கூலியாட்கள் வேலைசெய்து பிழைக்கிறார்கள். கடல் கரையிலுள்ளவர்கள் மீன் பிடிப்பதைத் தொழி

லாகக் கொண்டிருக்கிறார்கள். ஆடுமாடு மேய்த்தல், தச்சு, கொல் வேலைகள் கிராமந்தோறும் நடைபெறுகின்றன. ஸ்ரீவில்லிபுத்தூர் தாலூகாவில் மங்களூர் ஓடுகள் போன்ற நயமான ஓடுகளைச் செய்கிறார்கள்.

நாட்டுக்கோட்டைச் செட்டிகள் நமது ஜில்லாவில் மட்டுமல்லாமல் ரங்கூன், சிங்கப்பூர், கொழும்பு முதலிய இடங்களில் கடைகள்வைத்து, லேவாதேவி செய்கிறார்கள். விருதுநகர். சாத்தூர், சிவகாசி முதலிய ஊர்களிலுள்ளவர்கள் பலசரக்கு, நவதானிய வியாபாரங்களை மும்முரமாய் நடத்துகிறார்கள். திருப்பத்தூர், மானாமதுரை என்னுமிடங்களில் பாத்திரங்கள் செய்யப்படுகின்றன.

நமது ஜில்லாவிலிருந்து உண்டாகும் பொருள்கள் வெளியிடங்களுக்கு அனுப்பப்பட்டால், அவற்றுக்கு ஏற்றுமதி என்றும், வெளி யிடங்களிலிருந்து நமது ஜில்லாவுக்கு வருவிக்கப்படும் பொருள்களுக்கு இறக்குமதி என்றும் பெயர்.

நமது ஜில்லாவிலிருந்து பருத்தி, பருத்திக்கொட்டை காப்பிக்கொட்டை, ஏலக்காய், மிளகாய்வற்றல், முதலியவைகள் ஏற்றுமதி ஆகின்றன. பருத்திநூல், சீமைத்துணிகள் இரும்புச் சாமான்கள், மண்ணெண்ணெய், கண்ணாடிச் சாமான்கள், நெருப்புப்பெட்டி, காகிதம் முதலான எழுதுதற்கு உதவும் பொருள்கள் வெளித் தேசங்களினின்றும், உணவுப் பொருள்கள் வெளி ஜில்லாக்களினின்றும் வரும் இறக்குமதிச் சரக்குகளாம். விருது நகரிலும், சாத்தூர், சிவகாசி முதலிய இடங்களிலும் சந்தைகூடும். பல இடங்களிலும் நவதானியமும், பலசரக்கும், காய் கறிகளும் ஏராளமாக விற்பனை ஆகின்றன

68838

இருப்புப்பாதை.

வடக்கே சென்னையிலிருந்து கிழக்கே தனுஷ்கோடிக்குப் போகும் தென் இந்திய இருப்புப்பாதை நமது ஜில்லாவின் வழியாகவும் போகிறது. மதுரையிலிருந்து தூத்துக்குடிக்கு ஒரு கிளைப்பாதை போகிறது. இவைகளின் மூலம் மிகுதியான போக்கு வரவு சாதனம் ஏற்பட்டிருக்கிறது.

இப்பொழுது மண்டபத்திற்கும், பாம்பனுக்கும் மத்தியிலுள்ள பாம்பன் கால்வாயில் புதிதாய்ப் பாலம் போட்டிருக்கிறது. ஆகலால், புகைவண்டி ஏறுபவர்கள் மண்டபத்தில் ஏறினல் தனுஷ்கோடிபோய், அங்கிருந்து கப்பல் ஏறி, இலங்கைக்குப் போகலாம். இதற்குமுன் மதுரையிலிருந்து மண்டபத்திற்கும், பாம்பனிலிருந்து தனுஷ்கோடிக்கும் மட்டுமே இருப்புப்பாதை ஏற்பட்டிருந்தது. சமுத்திரத்தில் புதிதாய்ப் போட்ட பாதை முடிவானதால் சென்னையிலிருந்து வரும் புகைவண்டிகள் மதுரை, மண்டபம், பாம்பன், தனுஷ்கோடி முதலிய ஸ்டேஷன்கள் வழியாய் நேரே போகின்றன. இப்பொழுது தூத்துக்குடிப் பாதை கிளைப்பாதை ஆகும். இப்புதிய பாதை ஏற்படுத்தினதில் தென் இந்தியா இருப்புப்பாதைக் கம்பெனியார் ஏராளமான பணத்தைச் செலவிட்டார்கள்.

நமது ஜில்லாவில் கடல் கடக்க இருக்கும் இருப்புப்பாதை மகா விசித்திரமானது. புகைவண்டி போகையில் இருப்புப்பாதை தொடர்ந்திருக்கும்படிக்கும், மரக்கலங்கள் செல்லுகையில் இருப்புப்பாதை இடங்கொடுக்கும்படிக்கும் அமைக்கப்பட்டிருக்கிறது. அதன் படத்தை இங்குப் பாருங்கள்.



பாம்பன் கால்வாய்.

இந்த ஜில்லாவில் சென்னை-தூத்துக்குடிப் பாதையி லுள்ள ஊர்கள் விருதுநகர், சூலக்கரை, துலுக்கபட்டி, சாத்தூர், நள்ளி என்பன.

மதுரை, தனுஷ்கோடிப் பாதையிலுள்ள முக்கியமான ஊர்கள்—சிலைமான், திருப்பூவணம், திருப்பாச்சேத்தி, மானமதுரை, பார்த்திபனூர், பரமக்குடி, பாண்டியன் கண்மாய், இராமநாதபுரம், மண்டபம், பாம்பன், இராமேசுவரம், தனுஷ்கோடி என்பன ஆம்.

தற்போது விருதுநகர் ஒரு ஜங்ஷன்—இங்கிருந்து ஒரு கிளைப்பாதை பிரிந்து சங்கரலிங்கபுரம், சிவகாசி, ராமகிருஷ்ணபுரம், ஸ்ரீவில்லிபுத்தூர், ராஜபாளையம், கரிவலம் வந்த நல்லூர், சங்கரநயினர்கோவில், பாம்பகோவில்சந்தை, கடையநல்லூர், வள்ளியம்மை புரம் என்ற ஸ்டேஷன்களின் வழியே தென்காசிக்குப் போகிறது. இப்பாதை 1927-ஆம் வருஷம்தான் திறக்கப்பட்டது.

வண்டிப்பாதை.

நமது ஜில்லாவில் மொத்தம் 240 மைல் தூரத்துக்குச் சரளைபோட்ட வண்டிப்பாதையும், 350 மைல் தூரத்துக்குச் சரளைபோடாத பாதைகளும் உள்ளன. அவற்றுள் முக்கியமானவற்றை இங்கு அறிவோம்.

1. மதுரையிலிருந்து இராமநாதபுரத்துக்கு ஒரு பாதை போகிறது; இருப்புப்பாதை ஏற்படுமுன் இராமேசுவரத்துக்குப்போகும் யாத்திரிகள் இவ்வழியாகத்தான் போனார்கள்.

2. மதுரையிலிருந்து திருமங்கலம், கல்லுப்பட்டி, ஸ்ரீவில்லிபுத்தூர் ராஜபாளையம் வழியாய்த் தென்காசி

முதலிய இடங்களுக்குப் போகும் ரஸ்தா ஒன்று இருக்கிறது. இது நல்ல நிலைமையில் உள்ளது; செம்மண் நிலத்திற்கு மத்தியிற் செல்கிறது. இதில் மோட்டார்கள் செல்லுகின்றன.

3. மதுரையிலிருந்து விருதுநகர், சாத்தூர் வழியாய்ப் பாளையங்கோட்டைக்கு மற்றொரு சாலைபோகிறது. இது இருப்புப்பாதையை ஒட்டியே கரிசல் நிலத்துக்கு மத்தியிற் செல்லுகிறது.

4. மதுரையி லிருந்து காரியாபட்டி வழியாய் அருப்புக்கோட்டைக்கு ஒரு பாதை போகிறது. இதில் மோட்டார் வண்டிகள் செல்லுகின்றன.

5. திண்டுக்கல்லி லிருந்து திருப்பத்தூர், தேவகோட்டை வழியாகக் கடற்கரைக்கு ஒரு பாதை செல்லுகிறது.

6. மதுரையிலிருந்து சிவகங்கை திருவாடானை வழியாய்த் தொண்டிக்கு ஒரு பாதை செல்லுகிறது.

7. சாத்தூரிலிருந்து சிவகாசி வழியாய் ஸ்ரீவில்லிபுத்தூருக்கு ஒரு பாதை போகிறது. இதன் நீளம் 24-மைல். இதில் மோட்டார்கள் செல்லுகின்றன.

நதி, ஓடை முதலியவற்றின் ஊடே பாலங்கள் வேண்டியபடி கட்டப்பட்டுள்ளன.

பாம்பன் கால்வாய்.

இந்த ஜில்லாவுக்கும் இதன் பாகமாகிய இராமேசுவரத்திற்கும் மத்தியில் பாம்பன் கால்வாய் சுமார் 5-மைல் அகலத்திலிருக்கிறது. அது பாம்பைப்போல் நெளிந்து ஓடுகிறது. ஏதாவது காரியம் செய்கையில் சகுனத்தடை ஏற்பட்டால், அதற்கு இராமேசுவரம் போகையில் பாம்பன் ஆறு குறுக்கிட்டாற்போல், என்ற பழமொழி வழங்குகிறது.

முன் இராமேசுவரத்தீவும், இராமநாதபுரமும் சமுத்திரத்தால் பிரிக்கப்படாமல் ஒரே தரையாயிருந்து, பிறகு சமுத்திரத்தின் கொந்தளிப்பால் பிரிக்கப்பட்டதென்று நினைக்கக் கூடியதா யிருக்கிறது. அதில் மரக்கலங்கள் ஓடுவது அசாத்தியமாயிருந்தது. அப்பால் டச்சுக்காரர் அவ்வாய்க்காலைக்கொஞ்சம் சீர்ப்படுத்தினார்கள். பிறகு 1828ம் வருஷம் லூஷிங்டன் கவர்னர் துரையவர்கள் பிரயத்தனம் செய்து, அதை அதிகச் செப்பனிட்டார். அதை அநுஸரித்து, நமது துரைத்தனத்தார் முன்னிருந்த ஆழத்திற்கு மேல் 15-அடி ஆழத்திற்குப் பாறையைத்தோண்டினார்கள். அதுமுதல் அதில் சிறு கப்பல்களும், படகுகளும் தாராளமாய்ப் போக்கு வரவா யிருக்கின்றன. இக்கால்வாயின் மேல்தான் மண்டபத்தில் இருந்து இப்போது இருப்புப் பாதை பாம்பனுக்குப் போடப்பட்டது.

சமுத்திரக் கரையில் மரக்கலங்களின் மூலமாய் அதிகமான வியாபாரம் நடந்து வருகின்றது.

ஜனங்கள்.

மறவர் அல்லது தேவர் என்ற ஜாதியாரும், நாடார் என்ற ஜாதியாரும் நமது ஜில்லாவில் மிகுதி. நாட்டுக்கோட்டைச் செட்டிகள் (நகரத்தார்) நமது ஜில்லாவில் சிவகங்கை ஜமீனில் மிகுதியாய் வசிக்கிறார்கள். ராஜபாளையத்தில் ராஜூக்கள் என்ற ஜாதியார் வசிக்கிறார்கள். கள்ளர் என்ற ஜாதியார் பல ஊர்களில் இருக்கிறார்கள். முகம்மதியர்களும் கிறிஸ்தவர்களும் இந்த ஜில்லாவில் சொற்பமாய் இருக்கிறார்கள். கிறிஸ்தவர்களில் அமெரிக்கன் மிஷனைச் சார்ந்தவர்கள் அதிகம்.

1921-வது வருஷம் எடுத்த கணக்கின்படி நமது ஜில்லாவில் ஜனத்தொகை 17,21, 837. நமது ஜில்லாவில் சதுரமைலுக்குச் சராசரி 350 ஜனங்கள் வசிக்கிறார்கள். சாத்தூர்த் தாலூகா அதிக ஜனநெருக்கமுள்ளதாயும், சிவகங்கை குறைந்த ஜனநெருக்க முள்ளதாயு மிருக்கின்றன. நமது ஜில்லாவில் 100-க்கு, 90 பேர்கள் ஹிந்துக்களும், 6 பேர்கள் முகம்மதியர்களும், 4 பேர்கள் கிறிஸ்தவர்களும் வசிக்கிறார்கள்.

நமது ஜில்லாவின் முக்கியமான பாஷை தமிழ். தெலுங்கும், கன்னடமும், ஹிந்துஸ்தானியும் சொற்பத் தொகையுள்ள ஜனங்களாற் பேசப்படுகின்றன. இங்கிலீஷ் பாஷை கலாசாலைகளிற் கற்கப்படுகிறது. நமது ஜில்லாவில் 14 ஹைஸ்கூல்கள் உள்ளன. இவற்றில் 2 ஜமீன்தார்களாலும், 4 நாடார்களாலும், பாதிரிமார்களாலும், ஒன்று டிஸ்ரிக்ட் போர்டாராலும், பிற பொதுவாக அவ்வவ்வூரார்களாலும் நடைபெறுகின்றன. இவற்றைத் தவிர பாதிரிமார்களும், ஜில்லா போர்டாரும், எலிமெண்டரிக் கலாசாலைகளைப் பல ஊர்களில் ஏற்படுத்தி யிருக்கிறார்கள். நாட்டுக்கோட்டைச் செட்டிகள் சில ஊர்களில் வேதாத்தியயன பாடசாலைகளையும் தமிழ்க்கலாசாலைகளையும் வைத்திருக்கிறார்கள். சென்ற 8 வருஷகாலமாக நமது ஜில்லாவில் கல்வி அதிகமாய் அபிவிருத்தியாகி வருகிறது.

தாலூகாக்களும், முக்கிய பட்டணங்களும்.

1. சிவகங்கைத் தாலூகா.

சிவகங்கை—இந்த ஜமீனில் முக்கிய பட்டணமாகிய இவ்வூரில் ஜமீன்தார் வசிப்பதற்கு ஓர் அழகான அரண்மனை இருக்கிறது. ஒரு ஹைஸ்கூலும், ஜில்லாமுனிசீபுக்கச்சேரியும், டிப்டி தாசில்தார் கச்சேரியும் இங்கு உண்டு. புதன் கிழமைகளில் இங்கே சந்தை கூடுகிறது. பித்தளையினால் பாம்பு, பல்லிபோன்ற சாமான்கள் இவ்வூரில் செய்யப்பட்டு விற்கப்படுகின்றன.

மானமதுரை-வைகைக் கரையிலிருக்கிறஒருரெயில்வே ஸ்டேஷன். சிவன்கோயிலும், விசேஷித்த விஷ்ணு ஆலயமும் இங்கு உண்டு. இவ் ஊரின் முழுப்பெயர் வானர வீர மதுரை என்பது. சீதையை அநுமார் கண்டுபிடித்து வந்தற்காக அவருக்கு இவ் ஊரில் தான் சேனைபதிப்பட்டம் கொடுக்கப்பட்டது. இங்குச் செய்யப்படும் மண்பாண்டங்கள் பிரசித்தமானவை. வெண்கலப்பாத்திரங்களும் இங்குச் செய்யப்படுகின்றன. முனிசிபு கச்சேரியும், சப்ரிஜிஸ்தர் கச்சேரியும், சாதாரண ஆஸ்பத்திரியும் இங்கு உண்டு. அன்றியும் குஷ்டரோகங்களைத் தீர்க்க இன்னொரு ஆஸ்பத்திரியும் புதிதாய் ஏற்படுத்தப்பட் டிருக்கிறது ஒரு ஹைஸ்கூல் கலாசாலையும் இங்கு இருக்கிறது.

இடைக்காட்ர்—இங்கு ரோமன் காதலிக் கிறிஸ்தவர்களுடைய அழகிய கோயில் ஒன்றிருக்கிறது.

மணலூர்—இது பழைய பாண்டிய இராஜதானியின் தலை நகராய்ச் சிறிது காலம் இருந்தது.

நாட்டரசன் கோட்டை—இந்த ஊரில் கண்ணுத்தாள் கோயிலும், கல்வியிற் பெரிய கம்பர் சமாதியும் உண்டு.

திருப்பூவனம்—திருப்பூவணம் இது வைகையாற்றின் கரையிலுள்ள ஒரு ரெயில்வே ஸ்டேஷன். பாண்டியநாட்டிலுள்ள பாடல் பெற்ற பதினன்கு ஸ்தலங்களுள் இதுவும் ஒன்று. இதில் சிவன் கோயில் ஒன்று இருக்கிறது. வாழை, வெற்றிலை, தென்னை முதலியன நன்றாய் உண்டாகின்றன. இந்த ஊரைச்சுற்றி அதிகத் தோப்புகள் இருப்பதால், இது எப்போதும் குளிர்ச்சியாயிருக்கிறது. சப்ரிஜிஸ்தர் கச்

சேரியும், ஆஸ்பத்திரியும் சத்திரமும் இங்குண்டு. இங்குச் செவ்வாய்க்கிழமைகள் தோறும் சந்தை கூடும்.

காளையார்கோவில்—இதுவும் அப்பதினான்கு ஸ்தலங்களுள் ஒன்றான சிறந்த சிவஸ்தலம். இது சிவகங்கைக்குக் கிழக்கே பத்துமைல் தூரத்தில் இருக்கிறது. இவ் ஊர் சிவன் கோயிலிலுள்ள தேர் மிகப்பெரியது. இந்த ஊரில் வைகாசி மாதத்தில் பெரிய திருவிழா நடக்கும்.

திருப்பாச்சேத்தி—இங்கு சிவன் கோவிலுண்டு. இக் கடவுளைத் தூர்வாசர் முதலியோர் வழிபட்டு, மேன்மை அடைந்தார்களாம். இங்கு நெல், தென்னை, வாழை ஆகிய இவைகள் விசேஷமாய் வளரும். இங்கிலீஷ் கற்பிக்கப் படுகிற பள்ளிக்கூடம் ஒன்றுண்டு. பிரதி புதன்கிழமைகளில் இங்குச் சந்தை கூடும்.

வேம்பத்தூர்—இந்த ஊரில் தமிழ் படித்தவர்கள் பரம்பரையாக இருந்து வருகிறார்கள்.

2. திருப்புத்தூர் தாலூகா.

திருப்புத்தூர்—இது பாண்டிய 14 சிவ ஸ்தலங்களில் ஒன்று. இது ஒரு பெரிய வியாபார ஸ்தலம். இரண்டு ஆஸ்பத்திரிகளும், பல ஆபீசுகளும் இங்கு உண்டு. அவற்றுள் ஒன்றாகிய லூத்ரன் மிஷன் ஏற்படுத்திய கண்வைத்தியம் செய்யும் ஆஸ்பத்திரி மிகவும் பெயர் பெற்றது.

குன்னக்குடி (குன்றைக்குடி)—இது சிறந்த சுப்பிரமணிய சுவாமி ஸ்தலம். இந்த ஊரிலுள்ள மூன்று குளங்களும் கோயிலைச்சுற்றி இருக்கின்றன. அவைகள் பார்ப்பதற்கு மிகவும் அழகானவை.

திருக்கோஷ்டியூர்—இது சிறந்த விஷ்ணு ஸ்தலம். இங்கு மாசிமாதம் நடக்கும் தெப்பத்திருவிழா மிகவும் விசேஷமானது.

காரைக்குடி—இது ஒரு வியாபார ஸ்தலம். இதில் பல பணக்கார நாட்டுக்கோட்டைச்செட்டிகள் இருக்கின்றனர். அவர்கள் தானதருமங்கள் செய்வதிலும், சத்திரங்களும், கோயில்களும் கட்டுவதிலும் பிரபலமடைந்து வருகிறார்கள். இந்நகரில் ஒரு ஹைஸ்கூல் இருக்கிறது.

II. இராமநாதபுரம் ஜமீன்.

இந்த ஜமீன், இராமநாதபுரம் தாலூகா, பரமக்குடித் தாலூகா, முதுகுளத்தூர்த்தாலூகா, அருப்புக்கோட்டைத் தாலூகா, திருவாடானைத்தாலூகா என்ற ஐந்து தாலூகாக்களாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது.

3. இராமநாதபுரம் தாலூகா.

இதுவே இந்த ஜமீனில் முக்கியமான தாலூகா. இதன் நடுவில் வைகை நதி சென்று, சமுத்திரத்தில் விழுகிறது. இது கடற்கரையிலுள்ள தாலூகா.

இராமநாதபுரம்—இந்நகரின் பெயரால் இந்த ஜில்லாவிற்கு இப்பெயருண்டானது. தென் இந்தியா மதுரை தனுஷ்கோடி இருப்புப் பாதையில் இருக்கிறது. இங்குப் புராதனமான ஒரு கோட்டை உண்டு. இவ்வூரில் ராஜாவின் ஹைஸ்கூலும், எஸ். பி. ஜி ஹைஸ்கூலும் இருக்கின்றன. இவ் ஊரில் பார்க்கக்கூடிய இடங்களாவன:—இசை ஆயிரங்கொண்ட களஞ்சியம், இராமலிங்க விலாசம், இராஜாவின் அரண்மனை, சிங்காரத்தோப்பு, சாரதாம்பாள்விலாசம் ஆகிய இவைகளே. இராமலிங்க விலாசம் என்பதில்

இந்த ஜமீன் சொந்தக்காரரின் வமிசத்தாருடைய படங்கள் எழுதப்பெற்றுள்ளன.

இராமநாதபுரத்தில் நடக்கும் நவராத்திரி உத்ஸவத்திற்குப் பல தமிழ்ப் பண்டிதர்கள் பல இடங்களிலிருந்து வந்து ராஜாவை வாழ்த்தி, அவர் கொடுக்கும் சன்மானங்களைப் பெற்றுப் போவார்கள். இப்போதுள்ள ராஜாவாகிய ராஜ ராஜேஸ்வர முத்துராமலிங்க சேதுபதி அவர்கள் தமிழில் அதிக அபிமானமுள்ளவர். அவர் சென்னை சட்ட நிரூபண சபை அங்கத்தினர்; மதுரைத் தமிழ்ச்சங்க அக்கிராசனுதிபதி. வாரந்தோறும் இங்குப் பெரிய சந்தை ஒன்று கூடும். ஒரு பெரிய ஆஸ்பத்திரியும் உண்டு.

கீழக்கரை—இது இராமநாதபுரத்திற்கு 3 மைல் தூரத்தில் குண்டாற்றின் கரையிலுள்ள துறைமுகம். இது ஆதிகாலம் முதலே சிறப்புற்றது. சேரசோழபாண்டிய நாணயங்களும், மேல்நாட்டு நாணயங்களும் இங்கு கிடைத்தன.

மண்டபம்—இது கடற்கரை யோரத்தில் நிலபாகம் குறுகி இருக்கும் இடத்தில் இருக்கிறது. இருப்புப்பாதை ஏற்படுமுன் ஜனங்கள் இங்கிருந்து படகேறிப் பாம்பன் கால்வாயைக் கடப்பார்கள். தேக சௌக்கியத்திற்குத் தகுந்த இடம் இது. அநேகர் கோடைகால வாசத்திற்கு இவ்வூர்க்குப் போகிறார்கள்.

பாம்பன்—இது ராமேஸ்வரம் தீவுக்கு மேற்குப் பக்கத்தில் முற்கூறிய மண்டபம் என்ற ஊருக்கு எதிர்ப்பக்கத்தில் இருக்கிறது. இது ஒரு ரெயில்வே ஸ்டேஷன். இங்கு 100 அடி உயரமுள்ள விளக்குக்கூண்டு இருக்கிறது. 12 மைல் வரையிலும் அதன் ஒளி தெரியும். இது இராக் காலங்களில் கப்பலோட்டிகளுக்கு வழிகாட்டும். இப்பட்



இராமேசுவரம் கோபுரம்.

டணத்துக்கு அருகில் சமுத்திரத்தில் முத்துச்சிப்பி எடுக்கிறார்கள். உயர்ந்த மீனும், தேங்காயும் ஏற்றுமதியாகின்றன. இந்த ஊரில் சுப்பிரமணியர் கோவில் விசேஷமானது.

தங்கச்சிமடம்—பாம்பனுக்குச்சமீபத்தில்இருக்கிறது. முதலில் ஸ்ரீராமருக்கு இங்கு நல்ல தீர்த்தம் கிடைத்ததாம். இது யாத்திரை ஸ்தலம்.

இராமேசுவரம்—இது இராமேசுவரம் என்ற தீவின் மத்தியிலிருக்கிறது. இத்தீவுக்குக் கிழக்கே மன்னார்த்தீவு வரையில் 35 மைல் தூரத்திற்குக் கடலின் மத்தியில் ஒரு தொடர்ந்த பாறை இருக்கிறது. இதற்குச் சேது அணை என்று பெயர். ஆங்கிலத்தில் இதை ஆடம்ஸ் பிரிட்ஜ் என்பர். இது இராமர் லங்கைக்கு அரசனாகிய இராவணனை ஜெயிக்கப் போன போது போட்டபாலம். இராமேசுவரப் பட்டணம் மிகவும் புராதனமான பிரசித்திபெற்ற யாத்திரை ஸ்தலம். இந்தியாவின் எல்லாப் பக்கங்களிலிருந்து இந்துக்கள் இங்கு யாத்திரைக்கு வருவார்கள். இங்கே படத்திற் காட்டிய அழகிய சிவாலயத்திலுள்ள லிங்கம் தசரத சக்கிரவர்த்தியின் குமாரராகிய இராமரால் பிரதிஷ்டை செய்யப்பட்டது. அந்த ஸ்வாமியின் பெயர் இராமலிங்க ஸ்வாமி.

இராமேசுவரத்தீவு 11 மைல் நீளமும், 6 மைல் அகலமுங் கொண்டதாயிருந்தது. ஆனால் அது இப்போது விஸ்தீரணத்தில் அதிகரித்துக் கொண்டே வருகிறது.

தனுஷ்கோடி—இது இராமேசுவரம் தீவின் தென் கிழக்குப் பக்கத்தி லிருக்கிறது. தென்னிந்திய இருப்புப் பாதையின் தென் கோடி இங்குதான் முடிகிறது. இலங்கைக்குப் போகும் ஜனங்கள் இங்கிருந்து கப்பலேறிச் செல்லுகிறார்கள். இங்கு மேற்குக் கடலும், கிழக்குக் கட

லும் சந்திக்கின்றன. கிழக்கிலிருக்கும் கடல் இரத்தினகரம்; மேற்கிலிருப்பது மஹோததி. இந்துக்களுக்கு இது சிறந்த யாத்திரை ஸ்தலம். இராமர் வில்வளைத்து இங்கிருந்து ஒரு அம்பை விட்டனர் என்று சொல்லுகிறார்கள்.

தேவிபட்டினம்—இராமநாதபுரத்துக்கு வடக்கே இருக்கிற இப்பட்டினத்துக்கு நவபாஷாணம் என்றும் பெயர். நவபாஷாணமென்பதற்கு ஒன்பது கற்கள் என்பது அர்த்தம். தேவிபட்டினக் கரையிலிருந்து சுமார் 100 கஜ தூரத்தில் சமுத்திரத்தில் 9 கற்சிலைகள் இருக்கின்றன. இவை ஒன்பது கிரகங்களை உணர்த்துவன. இவற்றால் இப்பட்டினத்துக்கு நவபாஷாணம் எனப் பெயர் வந்தது என்று தெரிகிறதல்லவா? இங்குச் சமுத்திரத்தில் ஆழமும், அலைகளும் இல்லை. இராமேசுவரம் போகும் யாத்திரிகர்கள் முதலில் இங்கு முற்கூறிய நவக்கிரகங்களைப் பூசித்துப் பிரதக்ஷிணம் செய்துவிட்டுப் பின்னால் இராமேசுவரத்துக்குப் போவார்கள். இது ஒரு துறைமுகம்.

உத்தரகோசமங்கை—பேர்பெற்ற சிவஸ்தலம்.

தர்ப்பசயநம் அல்லது திருப்புல்லணை—இதுவும் சிறந்த யாத்திரை ஸ்தலமே. இரண்டு பெயர்களுக்கும் அர்த்தம் ஒன்றுதான். சயனம் அல்லது அணை என்பதற்குப் படுக்கை என்று அர்த்தம். ராமர் லங்கைக்குப் போகுமுன், இங்குத் தர்ப்பைப் புல்லின்மேல் படுத்து, நிஷ்டையில் இருந்ததால், இந்த ஸ்தலத்திற்கு இப்பெயர் வந்தது. இங்குள்ள கோயிலில், இராமர், தருப்பைப்புல்லில் படுத்திருக்கும் திருக்கோலத்துடன் இருக்கிறார். இராமேசுவரம் சென்று திரும்பும் யாத்திரிகர்கள் இங்கு ஸ்நானம் செய்து நாகப்பிரதிஷ்டை முதலியன செய்து திரும்புவார்கள்.

4. பரமக்குடித் தாலூகா.

பரமக்குடி (பரம்பக்குடி)—இது வைகை ஆற்றின் ஓரத்திலுள்ள ஒரு ரெயில்வே ஸ்டேஷன். ஜில்லா முனிசிப் கச்சேரியும், ஆஸ்பத்திரியும் இங்கே இருக்கின்றன. இங்கு ஒரு லோயர் செக்கண்டரிப் பள்ளிக்கூடம் இருக்கிறது. நெசவுத் தொழில் இங்கு விசேஷம்.

5. முதுகுளத்தூர்த் தாலூகா.

முதுகுளத்தூர்—இது இந்தத் தாலூகாவிலுள்ள யூனியன் டவுன். இதில் டிப்டி தாசில்தார் வசிக்கிருர்.

கமுதி—இது குண்டாற்றின் கரையிலுள்ள ஒரு யூனியன் டவுன். பாளையக்காரர்களால் கட்டப்பட்ட ஒரு கோட்டை இங்கே இருக்கிறது. அதின் சில பாகங்கள் பாழாய்க் கிடக்கின்றன. இவ்வூரில் சப்ரிஜிஸ்டர் கச்சேரியும், போலீஸ் ஸ்டேஷனும், முந்நூறு வருஷங்களுக்கு முன் கட்டப்பட்ட ரோமன் காதலிக் கிறிஸ்தவக் கோயிலும் உண்டு. அமெரிக்கன் மிஷன், லூத்ரன் மிஷன் ஆகிய இரண்டும் இவ்வூரில் கிறிஸ்தவ மதாபிவிருத்தியின் பொருட்டு வேலை செய்கின்றன. நெசவும், பித்தளை வெண்கலப்பாத்திரங்கள் செய்தலும் இவ்வூரின் கைத்தொழில்களாம். இங்கு மீன் வியாபாரம் மிகுதி.

அபிராமம்—இதில் லப்பை வகுப்பைச்சார்ந்த முகம்மதியர் மிகுதி. இங்கு முகம்மதியர்களுடைய சிறந்த பள்ளிவாசல் ஒன்று இருக்கிறது. இவ் ஊரார்களில் அநேகர் ரங்கூன் முதலிய தொலை தூரங்களுக்குப்போய் வியாபாரம் செய்கிருர்கள். இவ் ஊருக்குச் சமீபத்தில் உள்ள ஒரு குளத்தின் ஜலமானது குடிப்பதற்கும், நீர்ப்பாய்ச்சலுக்கும் உதவுகிறது. இங்கு நெசவுத் தொழிலும் நடக்கிறது.

6. அறுப்புக் கோட்டைத் தாலூகா.

இந்தத் தாலூகா முழுவதும் கரிசல் தரையால் ஆனது. ஆகையால் இதில் பருத்தி நன்றாய் விளைகிறது.

அறுப்புக்கோட்டை—இது ஜனநெருக்கமுள்ள இடம். இதில் அமெரிக்கன்மிஷன் பாதிரிமார் போர்ட்டிங் பள்ளிக்கூடம் ஏற்படுத்தி இருக்கிறார்கள். இங்குக் கெட்டியான பருத்திநூல் துண்டுகளும், சேலைகளும் நெசவாகின்றன. இந்த ஊருக்குப் போதுமான ஜலசௌகரியம் கிடையாது. தேவாங்கக் குலத்தாரால் மூன்று பெரிய எலிமெண்டரி கலாசாலைகளும், நாடார்களால் நடத்தப்பட்ட ஒரு பெரிய உயர்தர கலாசாலையும் இங்கு இருக்கின்றன.

பாலவநத்தம்—இது ஒரு சிறிய ஜமீன்கிராமம். இதன் ஜமீன்தார் இராமநாதபுரம் ஜமீன்தாரின் நெருங்கிய பந்து. இதன் ஜமீன்தாராகிய காலஞ்சென்ற ஸ்ரீமான் பாண்டித்துரைத்தேவரவர்கள் மதுரைத் தமிழ்ச்சங்கம் ஏற்படுத்தினர்.

பாலையம்பட்டி—இதுவும் ஒரு ஜமீன்; யூனியன் கிராமம். இதில் ஒரு ஸெக்கண்டரி வித்தியாசாலை இருக்கிறது.

திருச்சுழி (திருச்சுழியல்)—இதுவும் பாண்டியநாட்டுத் திருப்பதிகள் பதினான்கில் ஒன்று. இது பாடல் பெற்றிருக்கிற சிறந்த ஒரு சிவ ஸ்தலம்.

கோயிலாங்குளம்—தேவாங்கர்களும் தெலுங்குச்செட்டிகளும் இங்கு மிகுதி. இவ்வூர்க்கு மேற்புறம் ஒரு ஜைன விக்கிரகம் இருக்கின்றது.

7. திருவாடானைத் தாலூகா.

திருவாடானை—இது இந்தத் தாலூகாவில் முக்கிய மான ஊர். இதில் டிப்டி தாசில்தார் ஆபீஸிருக்கிறது. இதுவும் பாண்டிப் பதினுன்கு ஸ்தலங்களில் ஒன்றுதான்.

தேவகோட்டை—நாட்டுக் கோட்டைச் செட்டிகள் அதிகமாய் வசிக்கும் இடம். இங்கு டிவிஷனல் ஆபீஸர் வசிக்கிறுர்.

8. சாத்தூர்த் தாலூகா.

இது கரிசல் நிலத்தாலாகிய தென்றும், இதில் பருத்தி நன்றுய் விளைகிறதென்றும் முன்னமேயே படித் திருக்கிறீர்கள்.

சாத்தூர்—இது தென் இந்திய இருப்புப் பாதையில் வைப்பாற்றின் கரையில் இருக்கிறது. இங்கே வேண்டிய சாமான்கள் கிடையாதிருந்ததாலோ அல்லது எதனுலோ 'வேற்றார் அரிசி விறகுகறி யுண்டானல் சாத்தூருக்கில்லை சரி' என்றபழமொழி ஒன்று வழங்குகிறது. இங்கே பெரிய பஞ்சாபீசு ஒன்றும், இரண்டு ஹைஸ்கூல்களும் உண்டு.

விருதுநகர்—இதுவும் தென் இந்திய இருப்புப்பாதை யில் இருக்கிறது. இந்த ஊரில், நாடார்கள் மிகுதி. இந்த ஜில் லாவில் இதுவே பெரிய வியாபாரஸ்தலம். சுற்றுப்பக்கங்க ளில் விளையும் பருத்தி இங்கு வந்துதான் ஏற்றுமதியாகும். இங்குப் பெரிய பஞ்சு ஆலைகள் இருக்கின்றன. இவ்வூரி லுள்ள நாடார்கள் க்ஷத்திரிய உயர்தர கலாசாலை ஏற்படுத்தி இருக்கிறுர்கள். இதில் படிக்கும் மாணுக்கர்களுக்குச் சம்ப ளமே கிடையாது. இந்த ஊரில் பெரிய கட்டிடங்கள்

அநேக மிருக்கின்றன. இங்கே பஞ்சு, புகையிலை, காப்பிக் கொட்டை, ஏலக்காய் வியாபாரம் மிகவும் அதிகம். திங்கட் கிழமைகளில் இங்குச் சந்தை கூடும்.

சிவகாசி—சாத்தூருக்கு மேற்கே 12 மைல் தூரத்தில் இருக்கிறது. ஒரு முனிசிபாலிட்டி. இதுவும் ஒரு பெரிய வியாபார ஸ்தலம்தான். இதில் ஒரு ஹைஸ்கூல் உண்டு. புகையிலை, பருத்தி, வெல்லம் முதலிய வியாபாரம் இங்கு அதிகம். இது வரவரப் பெரியதாகிக்கொண்டே வருகிறது. இங்குள்ளோரில் பெரும்பாலார் நாடார் குலத்தார்கள்.

திருத்தங்கால்—இது சாத்தூருக்கு வடமேற்கே இருக்கிறது. இதில் விசேஷமான ஒரு விஷ்ணு ஆலயம் இருக்கிறது.

நள்ளி—இது இருப்புப்பாதை மேலுள்ள ஒரு ஜமீன் கிராமம்.

9. ஸ்ரீவில்லிபுத்தூர்த் தாலூகா.

இத்தாலூகாவே இந்த ஜில்லாவில் உள்ள செழிப்பான பாகம். மரமடர்ந்த காடுகளும், குன்றுகளும் சாலைகளும், ஓடைகளும் இதில் உண்டு.

ஸ்ரீவில்லிபுத்தூர்—இது இத்தாலூகாவின் முக்கிய முனிஸிபல் பட்டணம். இதுமிகவும் புராதனமான விஷ்ணு ஸ்தலம். இவ்வூர்க் கோயில் நாச்சியாருக்கு ஆக்கப்பட்டது. அவ் அம்மையார் பெரியாழ்வாரென்ற விஷ்ணுபக்தரின் அபிமான புத்திரி. இவ்வாழ்வார் பன்னிரண்டு ஆழ்வார்களில் ஒருவர். இவர் அநேக பாடல்களைப் பாடி இருக்கிறார். இவர் நந்தவனம் வைத்துப் புஷ்பமெடுத்துப் பெருமாளுக்குப் பூமாலை சாத்திவந்தார். ஒரு நாள் நந்தவனத்தின் துளசிச் செடியின்கீழ் ஆண்டாள் அவதரித்தாள்.



ஸ்ரீவில்லிபுத்தூர்க் கோபுரம்.

அவளை ஆழ்வார் எடுத்து வளர்த்துப் பருவம் வந்தவுடன் ஸ்ரீரங்கத்திலுள்ள பெருமாளிடம் ஒப்பிவித்தார். ஸ்ரீரங்க நாதர் சந்நிதியிற் போனதும், ஆண்டாள் மறைந்து விட்டாள். இந்த ஊரில் ஒரு பழைய பெரிய கோபுரமும், தேரும் உண்டு. அங்கு நடக்கும் ஆடி மாதத்திய திருவிழாவிற்கும், மார்கழி மாதம் நடக்கும் எண்ணெய்க்காப்புத் திருவிழா விற்கும் ஆயிரக்கணக்கான ஜனங்கள் சென்னை முதலிய பல இடங்களிலிருந்து வருவார்கள். இந்த ஊரில் நான்கு தெப்பக்குளங்களும், இரண்டு ஹைஸ்கூலும், துரைத்தன போதனா முறைக் கலாசாலையும், முனிசிப் கச்சேரியும் உண்டு. இங்குள்ள கோயில், திருமலைநாயக்கரால் சீர் திருத்திக் கட்டப்பட்டதென்று சொல்லுகிறார்கள். இவ் ஊரின் தென்பக்கத்திற்கு மடவார்விலாசம் என்றுபெயர். இங்குச் சிவன் கோயிலும், சிவகிரி ஜமீன்தாரால் கட்டப் பட்ட சத்திரமும், ஒரு பெரிய தெப்பக்குளமும் உண்டு.

இராஜபாளையம்--இது ஸ்ரீவில்லிபுத்தூருக்குத் தெற்கே 8 மைல் தூரத்தில் இருக்கிறது. இந்த ஊரில் இராஜாக்கள் என்ற ஜாதியார் மிகுதி. இவர்கள் விஜயநகர ராஜாக்கள் வம்சத்தைச் சேர்ந்தவர்கள் என்பர். இவர்கள் தெலுங்கு பாஷை பேசுகிறார்கள். இவ் ஊர் காய்கறிகள் விசேஷமான வை. இவ் ஊரிலுள்ள கருமான்கள் இரும்புவேலை செய்கி றார்கள். இது உயர்ந்த ஜாதி நாய்களுக்குப் பெயர் பெற்ற இடம். இங்கு ஜில்லா போர்டு ஹைஸ்கூல் புதிதாய் ஏற் படுத்தப்பட்டிருக்கிறது.

வத்திராப்பு (வத்திராயிருப்பு)—இது நீர் வளமுள்ள யூனியன் டவுன். இந்த ஊரில் பயிரிடுவோரே அதிகம். நெசவுத் தொழிலும் இங்குக் கொஞ்சமுண்டு. இங்கு ஒரு ஹைஸ்கூல் புதிதாய் ஏற்பட்டிருக்கிறது. இவ் ஊர் நெல்

லுக்குப் பெயர் பெற்றது. இங்கு சப்ரிஜிஸ்தர் கச்சேரியும் உண்டு.

சுந்தர பாண்டியம்—வத்திராயிருப்பை அடுத்த ஒரு பெரிய ஊர். இங்கு விவசாயம் விசேஷமாக நடக்கிறது.

கோல்லன்கோண்டான், சேற்றூர்—இத்தாலுகாவின் ஜமீன் கிராமங்கள்.

நத்தம்பட்டி—புதன் கிழமைகளில் இங்குச் சந்தை கூடும். இதற்குச் சமீபத்தில் திருமலை நாயக்கர் கட்டிய கட்டிடம் ஒன்றுண்டு.

இராமநாதபுரம் ஜில்லா சரித்திரம்.

ஆயிரக்கணக்கான வருஷங்களுக்கு முன் நமது தமிழ் நாடு சேரநாடு, சோழநாடு, பாண்டிநாடு என்ற மூன்று பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு, மூன்று ராஜாக்களால் ஆளப்பட்டது. அவற்றுள் நமது ஜில்லா பழைய பாண்டிய நாட்டின் ஒரு பாகமாம்.

இராமர் இலங்கைக்குப்போய்த் திரும்புகையில் இராமேசுவரத்தில் ஒரு சிவலிங்கப் பிரதிஷ்டை செய்தார். அப்போது மறவர் தலைவர் ஒருவரை அழைத்து, அவருக்குச் சேதுபதி என்ற பட்டத்தைக் கொடுத்து, அத்தீவைக் காக்கும்படி கட்டளையிட்டார் [இராமர் கதை உங்களுக்குத் தெரியுமா? உங்களுக்குத் தெரியாவிட்டால் உங்கள் உபாத்தியாயரிடம் கேட்டுத் தெரிந்து கொள்ளுங்கள்.] அப்போது பாண்டியரும் அவருடைய செய்கையை ஒப்புக்கொண்டு, மறவர் தலைவருக்குக் காடு அடர்ந்த சிறு நாட்டைக் கொடுத்து அதற்குக் கப்பம் வேண்டாம்.

என்றூராம். இதனால் இராமராலேயே மறவர் தலைவருக்குச் சேதுபதிப் பட்டம் கொடுக்கப்பட்டதென்று தெரிகிறது.

ஒரு காலத்தில், சோழராஜன் பாண்டிய நாட்டின் மேற் படை எடுத்து வருகையில், அதிவீர ரகுநாத சேதுபதி, சோழநாட்டரசனை ஜயித்துப் பாண்டியனுக்கு வெற்றியை உண்டாக்கினார். அப்போது பாண்டியன், தொண்டியை மேற்பார்க்கும் அதிகாரத்தை அவருக்குக் கொடுத்தார்.

பிறகு கன்னட தேசத்தரசர்களும், வேறு பல விரோதிகளும் பாண்டியனுடன் சண்டை செய்து, அவனுக்குப் பெரிய நஷ்டத்தை உண்டுபண்ணினபோது, வந்தவிரோதிகளைச் சேதுபதி துரத்திவிட்டார். அதற்காக அவருக்குப் பாண்டிய ராஜ்ய ஸ்தாபகர் என்ற பட்டம் கொடுக்கப் பட்டது.

இதற்கு வெகுகாலத்திற்குப் பிறகு, வரதுங்க ரகுநாதன் காலத்தில், சில தெலுங்கர், சோழனை, அவனுடைய நாட்டினின்றும் துரத்தி விட்டார்கள். அப்போது சோழன் பாண்டியனிடம் உதவிகேட்கப் பாண்டியன் சேதுபதியை அனுப்பினார். அவர்போய் விரோதிகளை ஜயித்து, நாட்டைச் சோழனிடம் ஒப்புவித்தார். அதுமுதல் சேதுபதிக்குச் சோழநாட்டு ஸ்தாபகர் என்ற பெயர் கிடைத்தது.

இதற்கு வெகு காலத்திற் கப்பால் குலோத்துங்க சேதுபதியின் காலத்தில் சோழன் பாண்டிய நாட்டின்மேல் படை எடுத்தான். அவன் பட்டுக்கோட்டை வரை சேதுபதியால் துரத்தப்பட்டான். அதற்கு வெகுமதியாகப் பாண்டியனிடம் சேதுபதி பெரும் நாட்டைப்பெற்றூர்.

சமர கோலாகல ரகுநாதசேதுபதியின் காலத்தில் பாண்டிய தேசத்தின் எல்லை சம்மந்தமாய்ப் பாண்டியனுக்கும்

சோழனுக்கும் சண்டை வந்தது. அதைத்தீர்த்து வைப்ப தற்குச் சேதுபதியை அனுப்பினர். அப்போது அந்த வேலையைச் சேதுபதி மிகவும் சாதுரியமாய்ச் செய்து முடித்தார். ஆதலால் பாண்டியன் அவருக்கு "ராஜராஜ, ராஜ பரமேசுவர, ராஜ மார்த்தாண்ட, ராஜகெம்பீர' என்ற பட்டத்தைத் தந்தார். சோழன் மன்னர் குடாக்கடல் முத்துச் சிப்பி வரும்படி !முழுதும் சேதுபதி எடுத்துக்கொள்ளச் சம்மதித்தார்.

விந்திய மலைக்குத் தெற்கே உள்ள நாடுகள் முழுதும் விஜயநகர ராஜாவின் ஆளுகைக்குள் இருக்கையில், அவர் தமக்குக்கீழ்ப்பட்ட அரசர்கள் எல்லாரையும் தம்மிடம் வரும்படி கட்டளையிட்டார். பாண்டியன், தனக்குப் பிரதிநிதியாகச் சேதுபதியை அனுப்பினன். அவர் போய்த் தாம் செய்யவேண்டிய காரியத்தைத் திருப்திகரமாய்ச் செய்து முடித்ததால், பாண்டியன் மன்னர் கோவில், திருவாரூர், தேவகோட்டை முதலிய ஊர்களை அவருக்குக் கொடுத்தான். இதுவே இராமநாத புரத்தின் பூர்வ விருத்தாந்தம்.

இனி நாயக்கர்களின் காலத்தில் சேதுபதிகள் தம் நாட்டைக் காத்துவந்ததைப் பற்றிக் கவனிப்போம்.

மதுரையை ஆண்ட நாயக்கர் அநுசரணையால் மறவ ஜாதித்தலைவர் பலர் இராமநாதபுரத்தை ஆண்டுவந்தார்கள். அவ்வமிசத்திலுதித்த உடையத்தேவர் கி. பி. 1590-ம் வருஷத்தில் ஒரு பெரிய ஒடங்காட்டுக்கு மத்தியில் ஒரு கோட்டையைக் கட்டிக்கொண்டு, தம்மைச் சார்ந்தவர்களுடன் இராமேசுவரம் யாத்திரிகளுக்குச் சிறிது தொந்தரவு கொடுத்தார். அப்போது மதுரையை ஆண்ட முத்துகிருஷ்ணப்பநாயக்கரின் குரு, இராமேசுவரத்திற்கு யாத்திரை

செல்ல, அவரை உடையத்தேவர் பத்திரமாய்ப் பாது காத்துச் சேது ஸ்நானம் செய்வித்து மதுரைக்கனுப்பினர். அப்படிச்செய்தவரைத் தம்மிடம வரவழைத்து, அவருக்குப் பல விருதுகளைக்கொடுத்துச் 'சேதுபதி' என்ற பட்டத்தையும் நாயக்கர் கொடுத்தார் என்று சிலர் சொல்லுகிறார்கள். ஆனல் நாயக்கர்களுக்கு முன்னலேயே சேதுபதி என்ற பட்டம் மறவர் தலைவர்களுக்கு ஏற்பட்டிருந்தது என்பதற்குச் சந்தேகமே இல்லை.

அது வரையில் போகலூரைத் தமது வாசஸ்தலமாக்கி, அதிலிருந்த சேதுபதிகள் இராமநாதபுரத்தில் ஒரு மண் கோட்டை கட்டிக்கொண்டு, அதில் வசித்துவந்தார்கள். அக்காலத்தில் சுற்றிலுமுள்ள நாடுகள் கொஞ்சம் கொஞ்சமாய் இந்நாட்டுடன் சேர்க்கப்பட்டன.

1623-1659ஆ சடையத்தேவர், தமது தத்துப் புத்திரனின் மகனுக்குப் பட்டம் சூட்டினர். அவர் காலஞ்சென்றதும், தம்பி என்ற ஒருவர், தாம் இறந்த சேதுபதியின் பிள்ளை எனச் சொல்லிக்கொண்டு, நாடு தம்மைச் சேர வேண்டுமென்று திருமலைநாயக்கரிடம் முறையிட்டார். அப்போது நாயக்கர் ஒரு சேனையைத் தம்பி வசம் அனுப்பினர். அதுசமயம் நாட்டை ஆண்ட சேதுபதி, தம்பியைத் தோற்கடித்துவிட்டார். அப்பால் திருமலைநாயக்கர் இராமநாதபுரத்தைப் பிடிக்கும்படி ஒரு பெருஞ்சேனையுடன் தளவாய் இராமப்பையரை அனுப்பினர். சேதுபதி இராமேசுவரத்திற்போய் ஒளிந்துகொண்டார். அச்சமயம் இராமப்பையர் திடீரென இறந்தார். ஆகிலும் அவருக்குப்பின்வந்த தளவாய் இராமேசுவரமடைந்து, சேதுபதியைச் சிறைப்படுத்தி, மதுரைக்குக்கொண்டுவந்தார். உடனே தம்பி சேது

பதி ஆனார். தம்பி மிகவும் பலஹீனராயிருந்தபடியால் நாட்டிற் கொலையும், களவுமே குடிகொண்டன. இராமேசுவர யாத்திரிகளுக்கு உண்டான கஷ்டத்தை நாயக்கரிடம் தெரியப்படுத்தினார்கள். அவர் 'தாமே இதற்குக் காரணர் என அறிந்து, சிறைப்படுத்திய சேதுபதியைச் சிறைநீக்கி, முன் போல் நாட்டை ஆளும்படி அனுப்பினார். அதுமுதல் சேது நாடு சமாதானமாய் இருந்தது. (தளவாய்-சேனைத்தலைவன்)

இப்படி இருக்கையில் மைசூரிலிருந்து வந்த பெருஞ் சேனை ஒன்று மதுரையைப் பலமாய் எதிர்த்தது. அப்போது நாயக்கரால் ஒன்றும் முடியாமல் சேதுபதிக்கு ஒரு கடிதமெழுதித் தமக்கு உதவி செய்யவேண்டுமென்று கேட்க, உடனே சேதுபதி ஒரு பெருஞ்சேனையுடன் வந்து, விரோதிகளைத் தாராபுரம் வரைத் துரத்தித்துரத்தி அடித்தார். அப்படிச் செய்த சேதுபதிக்குத் தம்முடைய தந்தப் பல்லக்கையும், 'திருமலைசேதுபதி' என்ற பட்டத்தையும், திருச்சுழி, திருப்பூவணம், பள்ளிமடம் முதலிய கிராமங்களையும் நாயக்கர் கொடுத்தார்.

1689௵த்தில் பல சேதுபதிகளுக்குப்பின்பு, துரை ரெகுநாத சேதுபதி பட்டத்திற்கு வந்தார். அவர் 36-வருஷங்கள் ஆண்டதால் அவருக்குக் 'கிழவன் சேதுபதி' என்ற பட்டப்பெயர் உண்டு. இவர் காலத்தில் கிறிஸ்தவர்களுக்கு ஏற்பட்ட கஷ்டம் இவ்வளவு அவ்வளவு அன்று. அருளாநந்தம் (John De Britto) என்ற காதலிக் பாதிரியார் அநியாயமாய்க் கொல்லப் பட்டார்.

கிழவன் சேதுபதி 1702௵ நாயக்கரையும், 1708௵ தஞ்சாவூர் அரசரையும் வென்று, சுயாதீனமாய்த் தமது நாட்டை ஆண்டுவந்தார். அவர் இறந்ததும், அவருடைய

நாற்பத்தியேழு மனைவிமார் பார்ப்போர் பரிதபிக்க, உடன் கட்டை ஏறினார்கள். [உடன் கட்டை ஏறலாவது, புருஷன் இறந்தால் அவனுடைய மனைவி அல்லது மனைவிகள் அவனுடன் அக்கினியில் விழுந்து உயிர் விடுதல்தான்.]

கிழவன்சேதுபதி, இறந்ததும் அவருடைய நாட்டிற்கு யார் சொந்தக்காரர் என்பதைப் பற்றிப் பெருங் கலகங்கள் உண்டாயின.

முடிவில் அவருடைய நாடு ஐந்துபாகங்களாகப் பிரிக்கப்பட்டது. மூன்று பாகங்களைச்சேதுபதியின் மாப்பிள்ளை கட்டையத்தேவர் பெற்றார். இரண்டு பாகங்களுக்குச் சசிவர்ணத்தேவர் சுதந்தரவாளி ஆனார். அச்சசிவர்ணத் தேவருடைய நாடே சிவகங்கை ஜமீன். ஆகையால் 1720 ஸ்ரீ த்துக்கு முன் சிவகங்கை ஜமீன், இராமநாதபுரத்தின் பாகமாகவே இருந்தது என்பது தெரிகிறது.

பதினெட்டாவது நூற்றாண்டில் சேதுபதிகள் தமிழ்ப் படிப்பை மிகவும் ஆதரித்ததாகத் தெரிகிறது. அப்போது பலவித்வான்கள் சன்மானிக்கப்பட்டு, ஏராளமான மானி பங்களைப் பெற்றிருக்கிறார்கள்.

துரைத்தன விளக்கம்.

1801ஸ்ரீ கர்நாடக நவாப் இராமநாதபுரம் அடங்கிய தன் தேசமுழுவதையும் கம்பேனியாருக்குக் கொடுத்தார்.

1857ஸ்ரீ இந்தியா தேசம் முழுவதுமே நமது கருணை தங்கிய விக்டோரியா ராணியார் ஆளுகைக்குள் வந்தது. அதுமுதல் ஜமீன்தார்கள் ஆங்கிலேய துரைத்தனத்துக்குக் கீழ்ப்படிந்து, கப்பங்கட்டுவதாய் ஒப்புக்கொண்டு, நாட்டைத் தங்கள் வசம் வைத்துக்கொண்டு இருக்கிறார்கள்.

இப்போது இருக்கும் சேதுபதி தந்தையின் பெயர் பாஸ்கர சேதுபதி அவர்கள். அவர் பல பாஷைகளில் வல்ல வர்' மிகவும் தர்மிஷ்டர். இப்போது இருக்கும் சேதுபதி யின் பெயர் ராஜராஜேசுவர முத்துராமலிங்க சேதுபதி அவர் கள் என்பது. தற்போது இந்த ஜில்லா மாட்சிமை தங்கிய சக்கிரவர்த்தி ஐந்தாவது ஜார்ஜ் என்பவரின் அரசாட்சிக் குள் இருக்கிறது. அவர் இங்கிலாந்து தேசத்திலுள்ள லண் டன்மாநகரத்தில் இருக்கிறார். அவருடைய ஆளுகைக்குள் நமது நாட்டைப்போல் அநேக நாடுகள் எல்லாக்கண்டங் களிலும் இருக்கின்றன. இந்த எல்லா நாட்டையும் அரசர் நேராகவே ஆளுவது சிரமமாயிருக்கும். ஆகையால், தமக் குப் பிரதிநிதிகளை ஆங்காங்கு நியமித்து இருக்கிறார். நமது நாட்டுப் பிரதிநிதியின் பெயர் லார்ட் எர்வின். இவர் ஸிம்லா வில் வசிக்கிறார். இவருக்கு உட்பட்டிருக்கும் ஒவ்வொரு ராஜதானிக்கும் ஒவ்வொரு கவர்னர் நியமிக்கப்பட்டிருக் கிறார் நமது இராதானி கவர்னருடைய பெயர் லார்ட் கோஷன் என்பது. ஒவ்வொரு ராஜதானியும் பல ஜில்லாக் களாகப் பிரிக்கப்பட்டு, கலெக்டர் என்பவரால் ஆளப்படு கிறது. ஆகவே இப்போது நமது அதிபதி, நமது ஜில்லாவின் கலெக்டர்தான். சமாதானம், வரி, நியாயம் முதலிய வற்றிற்கு அவர் தான் பொறுப்பாளி.

ஜமீன் பாகங்களில் நிலவரிக்கு ஜமீன்தார்கள் தான் சுதந்தரவாளிகள். அவர்கள் ஆங்கிலேய ராஜாங்கத் தாருக் குக் கப்பம் கட்டுகிறார்கள். இராமநாதபுரம் ஜமீன்தார் 3½லக்ஷ ரூபாயும், சிவகங்கை ஜமீன்தார் 3 லக்ஷ ரூபாயும் வருஷாவருஷம் கப்பம் கட்டுகிறார்கள். ஜமீன் இல்லாத அயன் கிராமங்களில் ராஜாங்கத்தாரே நேராக வரி வசூல் செய்து கொள்ளுகிறார்கள். இவ் எல்லாப் பாகங்களின்

சிவில், கிரிமினல், நியாயங்கள் முதலிய அதிகாரங்களும் நமது ராஜாங்கத்தார் வசமே இருந்து வருகின்றன. இராமநாதபுரம் ஜமீனுடைய 5 தாலூகாக்களில், திருவாடானை நீங்கலாக மற்ற நான்கும் இராமநாதபுரம் ஸப் கலெக்டர் ஆட்சிக்குட்பட்டவை சிவகங்கைத் தாலூகாவின் இரண்டு தாலூகாக்களும், திருவாடானைத் தாலூகாவும் தேவகோட்டை டிப்டிகலெக்டர் அதிகாரத்தில் அடங்கியவை. சாத்தூர் தாலூகாவும், ஸ்ரீவில்லிபுத்தூர் தாலூகாவும், சிவகாசி டிவிஷனிற் சேர்ந்தவை. ஜமீனிலுள்ள தாலூகா ஒவ்வொன்றுக்கும் டிப்டி தாசில்தாரும், சாத்தூர், ஸ்ரீவில்லிபுத்தூர் தாலூகாக்களுக்குத் தாசில்தார்களும் ஏற்படுத்தப்பட்டிருக்கிறார்கள். தாசில்தாருக்கு மேற்பட்ட அதிகாரி டிவிஷனல் ஆபீஸர். அவர்களுக்கு மேற்பட்டவர் ஜில்லா கலெக்டர்.

கலெக்டருக்கு ரெவின்யூ வசூல் செய்வதில் உதவி புரிய ஸப் கலெக்டர், டிப்டி கலெக்டர், தாசில்தார், (அல்லது டிப்டி தாசில்தார்) ரெவின்யூ இன்ஸ்பெக்டர், கர்ணம், கிராமாதிகாரி முதலிய உத்தியோகஸ்தர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். இவர்களில் கலெக்டர், டிப்டி கலெக்டர், கிராமாதிகாரிகளாகிய இவர்களுக்குக் கிரிமினல் அதிகாரம் அதாவது குற்றவாளிகளைத் தண்டிக்கும் அதிகாரம் உண்டு. ஜில்லாவுக்குத்தலைவர் கலெக்டர். ஆனாலும், அவருக்கு உதவியாகக் கீழேசொல்லும் இலாக்காக்கள் ஏற்பட்டிருக்கின்றன.

நியாயபரிபாலன இலாகா—இது ஜில்லாவில் நடக்கும் விவகாரங்களையும், குற்றங்களையும் விசாரித்து, நியாயத்தை நிலைநிறுத்துவது. இதில் நியாயவிசாரணை புரிவதில் ஜில்லா

ஜட்ஜ், சப்ஜட்ஜ், ஜில்லா முன்சீப், கிராமமுன்சீப் ஆகிய இவர்களும், குற்ற விசாரணை செய்வதற்குச் செஷன் ஜட்ஜ், ஸப் மேஜிஸ்ட்ரேட் ஆகிய உத்தியோகஸ்தர்களும் ஆவர்.

போலீஸ் இலாகா — ஜனங்கள் இராஜாங்கத்தாரால் ஏற்படுத்தப்பட்ட சட்டங்களைச் சரியாகக் கவனிக்கிறார் களா என்று பார்ப்பதும், வலியோர் மெலியோரைத்தொந் தரவு செய்யாமல் கவனிப்பதும், திருட்டு, கொலை, களவு, ராஜத்துரோகம் முதலிய குற்றங்கள் நடவாமல் கவனிப் பதும், கஜானாவைக் காப்பதும் இந்த டிபார்ட்மெண்டின் வேலைகள். இந்த இலாகாவின் கீழான உத்தியோகஸ்தர்கள் கான்ஸ்டேபில்கள். இவர்களுக்குமேல் ஸ்டேஷன் ஹவுஸ் உத்தியோகஸ்தர், ஸப் இன்ஸ்பெக்டர், இன்ஸ்பெக்டர், டிப்டி சூப்பிரண்டென்டன்ட், ஜில்லா சூப்பிரண்டென் டன்ட் ஆகிய இவர்கள் இருக்கிறார்கள்.

படிப்பு இலாகா—ஜில்லாவிலுள்ள பல நகரங்களிலும், கிராமங்களிலும் அநேக பள்ளிக்கூடங்கள் இருக்கின்றன. அவைகளுக்கு இராஜாங்கத்தார் ஏராளமான பணத்தைக் கொடுத்துப் படிப்பை விருத்திசெய்கிறார்கள். பள்ளிக்கூடங் களை மேல்பார்ப்பதற்காக இன்ஸ்பெக்டர், டிப்டி இன்ஸ் பெக்டர் என்பவர்கள் ஏற்படுத்தப்பட்டு இருக்கிறார்கள்.

அவர்கள் அடிக்கடி வந்து, பள்ளிக்கூடங்களில் எப்ப டிப் பாடங்களைக் கற்பிக்கவேண்டும் என்பதைக் காட்டுவ தோடு, அந்தந்தப் பள்ளிக்கூடத்தில் படிப்புச் சொல்லிக் கொடுப்பதற்குத் தக்கபடி கிராண்டுகள் கொடுப்பார்கள்.

தபால் இலாகா—வெளி நாட்டிலிருந்துவரும் கடிதங் களைக் கொடுக்கவேண்டியவர்களுக்குக் கொடுக்கவும், இங்கி ருந்து அனுப்பும் கடிதங்களைக்குறித்த இடங்களுக்குஅனுப்

பவும், இந்த இலாகா ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. கடிதங்கள் தவிர, பணம், புத்தகம், துணிமணிகள் முதலியவற்றையும் தபால் சாலைகள் மூலமாய் அனுப்பவேண்டியவர்களுக்கு அனுப்பலாம். பணம் கையில் கிடைத்தபோது இந்த இலாகாவைச் சேர்ந்த சேவிங்ஸ் பாங்கில் போட்டால், வட்டியுடன் மோசமில்லாமல் வேண்டும்போது பெறலாம். இந்த டிபார்ட்மெண்டின் உத்தியோகஸ்தர்கள் சூப்பிரண்டெண்டண்ட், இன்ஸ்பெக்டர், போஸ்ட்மாஸ்டர், ஸப்-போஸ்ட் மாஸ்டர், பிராஞ்சுப் போஸ்ட் மாஸ்டர் தபாற் சேவகர் முதலியோர் ஆவர்.

போதுஜன உபகார வேலைசெய்யும் இலாகா—(Public Works Department) நீர்ப்பாய்ச்சலுக்குவேண்டிய ஏற்பாடுகள் செய்வது இதன் கடமை ஆம். இந்த இலாகாவின் உத்தியோகஸ்தர்கள் சீப் எஞ்சினீர், எஞ்சினீர், சூயர்வைசர், ஓவர்ஸியர், ஸப் ஓவர்ஸியர், மேஸ்திரிகள் முதலியோர் ஆவர்.

சுகாதார இலாகா—ஜில்லாவாசிகள் வியாதியால் கஷ்டப்பட்டால் அதைத் தீர்ப்பதற்கும், வியாதி வராமல் தடுப்பதற்கும், இந்த இலாகா ஏற்பட்டிருக்கிறது. ஜில்லாவிலுள்ள பெரிய ஊர்களில் வைத்திய சாலைகள் இருக்கின்றன. ஜில்லா ஸர்ஜன், கண்பவுண்டர் முதலிய இவர்கள் இந்த இலாகாவின் உத்தியோகஸ்தர்கள்.

காட்டு இலாகா—மலை முதலிய இடங்களிலுள்ள மரங்களைக் காப்பாற்றிக் காட்டைச்சீர்படுத்த இந்த இலாகா ஏற்பட்டது. இதன் உத்தியோகஸ்தர்கள், ஜில்லா பாரஸ்ட் ஆபீஸர், ரேஞ்சர், வாட்ச்மென் முதலியோராவர்.

இந்த ஒவ்வொரு இலாகாவிற்கும் ஜில்லா கஜனுவி லிருந்து பணம் மாதாமாதம் கொடுக்கப்படுகிறது. வேலை செய்யமுடியாத கிழவர்கள் பென்ஷன் என்ற உபகாரச் சம்பளம் பெறுகிறார்கள். ஒவ்வொரு இலாகாவிற்கும் மேலான அதிகாரிகள் சென்னையில் இருக்கிறார்கள். அவர் கள் அந்தந்த இலாகாவின் விஷயங்களைச் சென்னை கவர்ன ருக்குத் தெரிவிக்கிறார்கள். அவர் இவைகளை நமதுபெருமை தங்கிய ஐந்தாவது ஜார்ஜ் சக்கரவர்த்தியார் நியமித்த இந்திய ராஜாங்கக் காரியதரிசிக்குத் தெரியப்படுத்துகிறார். அவர் பார்த்து, நமக்கு வேண்டிய நன்மைகளை அப்போதைக் கப்போது செய்கிறார்.

முற்கூறிய இலாகாக்கள் நமது துரைத்தனத்தாரால் நேரிற் கவனிக்கப்பட்டாலும், சில விஷயங்களில் நமக்குச் சுய ஆட்சி கொடுத்திருக்கிறார்கள். அந்த இலாகாவின் அதிகாரிகள் பழைய ரஸ்தாக்களைப் பாதுகாத்தல், புதிய ரஸ்தாக்களை ஏற்படுத்தல், ஆரம்பக் கல்வியை விருத்தி செய் தல், ஆஸ்பத்திரிகளை வைத்துப் பரிபாலித்தல் முதலிய காரியங்களைக் கவனிக்கிறார்கள். இந்த ஜில்லாவின் சுய ஆட்சி சபைக்கு ராமநாதபுரம் ஜில்லா போர்டு என்று பெயர். அந்தப் போர்டின் தலைமை அதிகாரிக்கு ஜில்லா போர்டு பிரஸிடேன்ட் என்று பெயர். ஜில்லா போர்டின் ஆட்சியின் கீழ்ப் பல தாலுகா போர்டு சபைகள் இருக் கின்றன.

ஒரு ஜில்லாவிலே எத்தனை தாலுகாக்கள் இருக்கின் றனவோ, அத்தனை தாலுகா போர்டுகள் இருப்பது வழக் கம். தாலுகாக்கள் சிறியனவாயிருந்தால், இரண்டு தாலு காக்களுக்கு ஒரு தாலூகா போர்டு இருக்கும். தாலூகா

போர்டின் தலைமை அதிகாரிக்குத் தாலூகா போர்டு பிரஸிடேன்ட் என்று பெயர். தாலூகா போர்டு அங்கத்தினர், அந்த அந்தத் தாலூகாவில் வரி கொடுக்கிறவர்களால் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். அந்தத் தாலூகா போர்டு சபை அங்கத்தினர் ஜில்லா போர்டு அங்கத்தினரைத் தேர்ந்தெடுக்கிறார்கள்.

பெரிய நகரங்களில் முனிசிபாலிடிகள் உள்ளன. அதற்கு முனிசிபல் சபை உண்டு. அந்தச்சபையின் அங்கத்தினருக்கு முனிசிபல் கவுன்சிலர்கள் என்று பெயர். முனிசிபல் கவுன்சிலர்களை அந்த அந்த நகரங்களில் வரி கொடுக்கிறவர்கள் தேர்ந்தெடுக்கிறார்கள். அந்தக் கவுன்சிலர்கள் ஒன்று சேர்ந்து, அந்தச் சபையிலிருந்து, ஒரு சேர்மேனைத் தேர்ந்தெடுக்கிறார்கள். ஜில்லா போர்டு செய்யும் எல்லா வேலைகளையும் முனிசிபாலிடிகளும் அந்த அந்த நகரங்களிற் செய்கின்றன. முனிசிபாலிடியானது ஜில்லா போர்டின் அதிகாரத்துக்கு உட்பட்டதன்று.

இங்கனம் நமக்குப் பல உரிமைகளைத் தந்து நீதியுடனும், அன்புடனும் பெற்றோரைப்போல் நம்மைப் பாதுகாத்து வருகின்ற நமது சக்கரவர்த்தியையும், சக்கரவர்த்தினியையும், ஆங்கில அரசாட்சியையும் மனங்களித்து வாழ்த்துவோமாக.

68838

U.21196
N27

ஜில்லா பூகோள வர்க்கம்.

இவை பசுமலை உயர்தர பாடசாலைத் தமிழ்ப்பண்டிதர் ஸ்ரீமத் நெ. ரா. சுப்பிரமணிய சர்மா அவர்களால் துரைத்தனத்தார் ஏற்படுத்திய புதிய விதிகளை அனுசரித்து எழுதப் பெற்று, தமிழ்நாடு முழுதும் பாராட்டப்பட்டுவருகின்றன.

மதுரை ஜில்லா பூகோள சாஸ்திரம்		0—5—0
இராமநாதபுரம் ஜில்லா	ஷை	0—5—0
திருநெல்வேலி ஜில்லா	ஷை	0—5—0
திரிச்சிராப்பள்ளி ஜில்லா	ஷை	0—5—0
தஞ்சாவூர் ஜில்லா	ஷை	0—5—0
சேலம் ஜில்லா	ஷை	0—5—0
கோயம்புத்தூர் ஜில்லா	ஷை	0—5—0
வட ஆற்காடு ஜில்லா	ஷை	0—5—0
தென் ஆற்காடு ஜில்லா	ஷை	0—5—0

இவற்றுள் அந்தந்த ஜில்லாக்களின் சரித்திரமும் பொதுவாய் அரசியலும் சுருக்கமாக எழுதிச்சேர்க்கப்பெற்றுள்ளன.

இதர ஜில்லாக்களின் பூகோளம் விரைவில் வெளிவரும்.

உப பாடமாக வைக்கத்தகுந்த புத்தகங்கள்.

கதையும் பாட்டும் 1, 2 பாகங்கள் தனித்தனி	0—3—0
இராணி மங்கம்மாள் சரித்திரம்	0—1—0
திருமலைநாயக்கர் சரித்திரம்	0—2—0
ஷை பெரியபுத்தகம்	0—10—0
கிருஷ்ணன் தூது	0—2—0
பெரியார் பெருமை	0—3—0
கண்ணன் பாலலீலை	0—6—0
இராமாயண சாரசங்கிரகம்	0—6—0
பாரத சாரசங்கிரகம்	0—5—0
பாகவத சாரசங்கிரகம்	0—10—0
விராடநகரத்தின் ரகசியம்	0—12—0
விநோதக்கதைகள்	0—10—0
மாணவர் நீதிக்கதைகள்	0—6—0
நல்லொழுக்க போதம்	0—6—0

மதுரை, புத்தகவியாபாரம்

இ. மா. கோபாலகிருஷ்ணக் கோன் வெளியிட்ட

தமிழ்ப் புத்தகங்கள்.

துரைத்தனத்தாரால் அங்கீகரிக்கப்பெற்றன.

புதிய பாடப் புத்தகங்கள்:—இவை துரைத்தனத்தார் விதிகளை அனுசரித்து, நூதன போதனுமுறைக் கிணங்க, சுகாதாரம், அரசியல், பூமிசாஸ்திரம், இலக்கணம், தேகதத்துவம், பிராணிசாஸ்திரம், தாவரசாஸ்திரம், புராணம், சரித்திரம் முதலியன வகுப்புக்குத் தக்கவாறும், மாணவர்கள் எளிதில் உணருமாறும் சிறந்த தமிழ் நடையில் எழுதப் பெற்றுள்ளன.

புதிய முதல் பாடம்	0—2—0
புதிய இரண்டாம் பாடம்	0—3—0
புதிய மூன்றும் பாடம்	0—3—6
புதிய நான்காம் பாடம்	0—4—6
புதிய ஐந்தாம் பாடம்	0—6—0

நல்லொழுக்க போதவர்க்கம்; நீதிவாக்கியக் கதைகள்.

உலகநீதி	நீதிவாக்கியக் கதைகள்	0—2—0
ஆத்திசூடி	நீதிவாக்கியக் கதைகள்	0—2—0
கொன்றைவேந்தன்	நீதிவாக்கியக் கதைகள்	0—2—0
வெற்றிவேற்கை	நீதிவாக்கியக் கதைகள்	0—3—0
மூதுரை	நீதிவாக்கியக் கதைகள்	0—5—0
நல்வழி	நீதிவாக்கியக் கதைகள்	0-10—0

ஒவ்வொரு வகுப்பிற்கும் குறித்துள்ள செய்யுட்பாட வாக்கியங்களை மாணாக்கர்கள் நெட்டுருக்கொண்டு பதவுரை, கருத்துரைகளை மனனம் செய்தும், அவைகளின் கருத்துக்கள் மனதில் பதியாது நிற்கும் குறையை நீக்கும் நோக்கங் கொண்டு, கதைகளைப் படித்துத் தெளிவது, அக்கருத்தமைந்த வாக்கியங்களைக் கற்றல் கன்மேல்பதிந்த எழுத்தைப்போல் மனதில் நிலைபெறுமாறுஎழுதப் பெற்றுள்ளன. நல்லொழுக்கப் போதத்திற்கும் இவைநற்றுணையாகும். கதாவாசகப் புத்தகங்களாகவும் இவற்றை வழங்கலாம். நாம் போவிஷன் என்னும்பாஷாஞானபோதத்திற்கும் இவை ஏற்றவை.